தென்மொழி

# பொங்காதோ உள்ளம் புலர்ந்து!

'எந்த ஓர் ஆற்றலும் இந்தித் திணிப்பையினி
வந்து நிறுத்துதல் வாயாதாம்!—என்றே,உன்
இந்திரா காந்தி இயம்புகிறார், செந்தமிழா!
இந்திரா காந்தி இயம்புவது, நீ,உன்றன்
சொந்த நலன்கருதிச் சோர்வுற்ற தன்மையன்றோ?

சொந்த நலன்கருதிச் சோர்வுற்ற தன்மையினால்
நந்தமிழ்த் தாய்க்கே நலிவுவந்து சேராதோ?
நந்தமிழ்த் தாய்க்கே நலிவுவந்து சேர்ந்திடுமேல்
எந்தமிழப் பேரினமும் என்றும் அடிமையன்றோ?
எந்தமிழப் பேரினந்தான் என்றும் அடிமையுற்றால்
இந்த நிலமும் போம்! ஏய்ந்தநலம் எல்லாம்போம்!
அந்தப் பொழுதிலுனை ஆர்வந்து காத்திடுவார்?

அந்தப் பொழுதிலுனை ஆர்வந்து காத்திடினும்
இந்த மொழியும் இனமும் இருந்திடுமா?
இந்த மொழியும் இனமும் இல்லையென்றால்,
எங்குன் ஒளியுருவம்? எங்குன் பெருமைநலம்?
எங்குன் வரலாறு? எங்கேதான் நீயிருப்பாய்?

இங்காகிலுமுன்றன் எண்ணம் மலரட்டும்!
இங்காகிலுமுன் இனநலமும் ஓங்கட்டும்!
மங்காத செந்தமிழின் மாட்சி விளங்கட்டும்!
பொங்காதோ உள்ளம் புலர்ந்து!

சுவடி 16 ஆசிரியர் பெருஞ்சித்திரனார் விலை
ஓலை: 9 ஓர் உருபா

# நமக்கு வந்த மடல்கள்.

**0:771:** அன்புக்கும் வணக்கத்திற்குமுரிய ஐயா அவர்கட்கு, 'தமிழ்நாட்டின் இன்றைய அரசியல் நிறைவு தருவதாயில்லை' என்னும் தங்கள் ஆரியவுரை; சிறந்த தங்களின் நடுநிலை அரசியல் அறிவைப் புலப்படுத்துகின்றது. மாறவர்மன் மக்கள் பற்றிய வரலாற்றுச் செய்தியைத் தாங்கள் தந்துள்ள முறை, நேரத்தில் விடப்படும் தக்க முன்னறிவிப்பாகும். அன்பன்,

— **அ. பசுபதி**, புதுச்சேரி-8.

**0.772:** தனித்தமிழ்க் காவலரே! தமிழ் நெஞ்சமே! "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீர் இளமைச் செந்தமிழ்" மொழியில் அளப்பெரும் சொற்கள் இருக்க, வடமொழியாம் சமசுக்கிருதச் சொல்லாம் 'ஆகாசவாணி' என்ற சொல்லை நமது தமிழகத்தில் நிறுவிய நடுவண் அரசு வானொலி நிலையத்தில் பயன்படுத்தியதை எதிர்த்து போராட்டம் செய்தார் தமிழ்க்காவலர் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள். அதன் விளைவால் அச்சொல்லை "ஆல் இந்திய ரேடியோ" என வழங்க முன்வந்தது. ஆல் இந்திய ரேடியோ என்ன அழகுத் தமிழ்ச் சொலலோ? கன்னித் தமிழ்ச் சொல்லோ? நம் வரிப் பணத்தில் அமைந்த நிலையத்திற்கு ஏன், அன்னை மொழியான அழகு மொழியான உலகில் சிறந்த இனிய மொழியான உயர் தமிழ்ச் சொல்லில் வழங்க முன் வரவில்லை? கோடிக்கணக்கான நம் மக்கள் வரிப் பணத்தில் வாழ்கின்ற ஒரு நிலையத்தில் ஒரு சொல்லை மாற்ற உரிமை இல்லெனில் இதை எவ்வாறு பொறுத்துக் கொள்வது. இச்சொல் தமிழில் வர, தமிழ் நெஞ்சங்கள் கொதித்துப் போராட முன்வரும் நாள் எந்நாளோ?

காலையில் வானொலிப் பெட்டியைத் திறந்தால் போதும். இந்தி எனும் அரக்கி காதைத் துளைக்கிருள். இங்கென்ன இந்தி பேசுகிறவர்களா இருக்கின்றனர்? புரியாத மொழியினைக் கேட்டுக் கொள்ள நாம் என்ன அறிவிலிகளா? இந்த இழிசெயலை அரசு செய்வது எந்நாட்டில் உண்டு? காலையில் தமிழ் மணம் என ஒரு நிகழ்ச்சி. தமிழர்கள் வரிப் பணத்தில் அமைந்த ஒரு நிலையத்தில் வடமொழி, இந்தி ஒலிபரப்பப்படுகிறது. நாள் முழுதும் தமிழ்மணம்தான் இருக்க வேண்டுமே தவிர தமிழ் மணத்திற்கு என்று ஒரு கால் மணி நேரமா ஒதுக்குவது? சென்னை வானொலி நிலையத்தில் இரவு நேரங்களில் வடமொழியினைக் கூறி ஒலிபரப்புகின்றனர். வடமொழி பேசுவோர் இங்கு உள்ளனரா? புரியாத மொழியை ஏன் மொழி வெறியர்கள் ஒலிபரப்புகின்றனர்? மற்ற மாநிலங்களில் தில்லியில்; வேம்பாயில் தமிழர்கள் வாழ்கிருர்கள் என்று தமிழினை ஒலிபரப்புதல் உண்டோ? இல்லையே! அப்படியிருக்க மாறுபட நிகழ்ச்சியினை வகுப்பது அறமா? இச்செயலினை அ"சு

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை ; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




சுவடி: 16 ஓலை: 9.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

மேழம். தி. பி. உ௲௧௧-

ஏப்ரல்-மே-1980.

# தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]


## தேசியம் பேசும் திருடர்கள்!



நிலம் பரவலாக இருந்தால் கொள்ளையடிப்பவர்களுக்குத் தங்கள் வேலை எளிதாக முடியும்; சிறப்பாகவும் நடைபெறும். அரசியல் கொள்ளையர்களுக்குச் சொல்லவே வேண்டியதில்லை. ஏனென்றால் இவர்கள் பகலில் கொள்ளையடிப்பவர்கள். இவர்கள் தேசியம் பேசுகிறார்கள் என்றால், உண்மையில் நாட்டு மக்கள் நலனில் முழு அக்கறை கொண்டுதான் அப்படிப் பேசுகிறார்கள் என்று எவரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. மெய்யாகவே இப்பொழுதுள்ள அரசியல் தலைவர்கள் அவ்வப்போது வெளிப்படுத்துகிற கருத்துகளில் பற்பல வகையான உள்நோக்கங்கள் உள்ளன என்பதைப் போகப் போகத்தான் கண்டு கொள்ள முடியும். மேலும், இன்றைய நிலையில் தேசியத் தலைவர்கள் என்ற உயர்ந்த தகுதியுடைய தலைவர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே தேசிய நலன் கருதிக் கூறுவதாக இவர்கள் வெளிப்படுத்தும் பேச்சுகளில் எவரும் நம்பிக்கை வைக்கவும் தேவையில்லை. இக்கால் இந்தியத் தேசியம் பேசும் தலைவர்களை இந்த அளவில்தான் நாம் மதிப்பிட முடியும்.

இந்தியா, பல தேசிய இனங்கள் ஒன்று சேர்ந்த நாடு என்ருலும் இங்கு இரண்டு வகையான அடிப்படைக் கோட்பாடுகள் நிலவுவதை எவரும் மறுத்திட வியலாது. ஒன்று, மிகமுன்பே இங்குத் தோன்றி வேரூன்றி நிற்கும் திரவிடக் கோட்பாடு. அஃதாவது பழந்தமிழ்க் கோட்பாடு. இரண்டு, இந்தக் கோட்பாட்டை உள்ளடக்கிச் செரித்துக் கொண்டு பரவி நிற்கும் ஆரியக் கோட்பாடு. இந்தியாவின் எந்த மக்கள் கூறை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இந்த இருவகை நீரோட்டங்களை மக்களின் ஆய்வாளர்கள் மிகத் தெளிவாகப் பார்க்கலாம். இங்குப் பேசப் பெற்று வரும் மொழிகளை எடுத்துக் கொண்டாலும் சரி; இங்குள்ள நாகரிகப் பண்பாட்டு நிலைகளை எடுத்துக் கொண்டாலும் சரி; அல்லது இங்குள்ள கலைகள், கல்வி நிலைகள், அரசியல் பொருளியல் கூறுகள் ஆகியவற்றுள் எதனை எடுத்துக் கொண்டாலும் சரி; அவை அத்தனையுள்ளும் திட்டுத் திட்டான இவ்விரண்டு திரவிட, ஆரிய இன மெய்ம்மக் கூறுகள் இழையோடுவதை வெளிப்படையாகக் காணலாம். இவை காலப் போக்கில் ஒன்றினேடொன்று அல்லது ஒன்றினுள் ஒன்று அல்லது ஒன்றுபோல் ஒன்று கலந்து ஊடாடுவதாகத் தெரிந்தாலும், எத்தனைக் காலத்திற்குப் பின்னும், இவ்விரண்டு தன்மைகளையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்துத் தேர்ந்து கொள்ளும்படியாகவே, இவற்றின் அடிப்படைகள் வெளிப்படையாக அமைந்துள்ளன. எனவே, எத்துணைதான் தேசியப் பூச்சுகளை இவற்றின் மேல் பூசினுலும், அல்லது இவையிரண்டையும் ஒட்ட வைப்பதற்கான பற்றவைப்புகளைச் செய்தாலும் இவையிரண்டும் அகத்தும் புறத்தும் ஒட்டாமலே வேறுபட்டுத்தான் காட்சியளிக்கும் தன்மையுடையன.

ஏனெனில், இவையிரண்டும் நேர் எதிரான தன்மைகள் உடையன. ஒன்றையொன்று அழித்துத் தன்னுள் அடக்கும் வலிமை சான்றன. அந்த வகையில் இங்குள்ள திரவிட இன மரபுத் தன்மைகள் ஆரிய இனமரபுத் தன்மைகளால் காலச் சூழலில் வலிமை குறைக்கப்பட்டன; பதவி யதிகாரங்களால் சிதைக்கப்பட்டன. இந்தச் சிதைவே பின் வந்த ஆரிய இனமரபுக் கொள்கைக்கு வலிவாக அமைந்து விட முடியாதெனினும், தெரிந்தோ தெரியாமலோ, இந்தியாவுக்கு விடுதலை தந்து அதனைக் குடியரசு நாடாக ஆக்கி விட்டுச் செல்லும் வேளையில், வெள்ளைக்காரர்கள் அதன் இறைமை முழுவதையும் ஆரிய இனத்தவர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டார்கள். அந்த நிலை அவர்களின் இனமரபை இன்னும் ஒருபடி வலிமைப்படுத்திக் கொள்ளும்படியான வாய்ப்பை அவர்களுக்குத் தந்து விட்டது. இதன் வழி, அவர்களின் மேலாளுமை மிக்கோங்கி, பழந் திரவிட இனமரபு நிலைகள் அனைத்தும் சிறிது சிறிதாகச் சிதைக்கப் பெற்றும் வலுக் குறைக்கப் பெற்றும், உருமாற்றப் பெற்றும், தாழ்த்தப் பெற்றும், வரலாற்று

அடிநிலைகள் திரிக்கப்பெற்றும், இன்று இந்தியாவே ஆரிய நாடு என்னும் வகையில் வெளி உலகத்தவர்களுக்குப் பறைசாற்றப்படும் அளவில் பொய்களையும், புரட்டுகளையும் புனைசுருட்டுகளையும் கருவிகளாகக் கொண்டு, நிலைகள் தலைகீழாக்கப்பட்டு விட்டன. இந்நிலை அவர்களுக்குத் தேசியம் பேசுவது எளிதாகி விட்டது. இந்தியத் தேசியம் என்பது ஏதோ, அரசியல் படிநிலை வளர்ச்சி போலும், பொருளியல் நாகரிக முதிர்ச்சி போலும் திட்டமிட்டுப் பேசிக் காட்டப் பெறுகிறது. வெளியுலகத்தவர்களும் இவர்களின் கரவான பேச்சையும், ஒரு மிகப்பெரும் தேசிய இனத்தையும் வழிவழியாய் மிக்கூர்ந்து வரும் அதன் கலை, கல்வி, பண்பாட்டு நலன்களைக் கட்டழிக்கும் கொடுஞ்செயலையும் வெளிப்படையாக அறிந்து கொள்ள வாய்ப்பின்றி, இத்தேசியம் பேசும் திருடர்களின் திருகுதாள உரை மயக்குகளில், இங்கு நடப்பனவெல்லாம் ஏதோ உயர்ந்த தேசிய இன முன்னேற்ற முயற்சிகளே என்பதாக நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். இந்நிலை தகர்த்தெறியப்பட வேண்டும். அதற்கு இத் திரவிட இன வழிமுறையினர்தாம் பெரு முயற்சி செய்ய வேண்டும்.

இம் முயற்சிக்குப் பெருந்தடையாக உள்ளவர்கள், இத்திரவிட இனத்திலேயே பிறந்து, இவ்வின நலன்களையே உண்டு கொழுத்து, இங்குள்ளவர்களுக்கே பகைவர்களாகவும் காட்டிக் கொடுப்பான்களாகவும் மாறித் தேசியம் பேசி, வடநாட்டுத் திருடர்களின் கையாட்களாகச் செயல்பட்டு வரும் சில்லறைத் திருடர்களே. இவர்களைத்தாம் நாம் முதலில் இனங் கண்டு கொள்ள வேண்டும். கடந்த கால இன நல முன்னேற்ற முயற்சிகளும், நாட்டு விடுதலை முனைப்புகளும் சாணேறி முழஞ்சறுக்கும் வீணான வெற்று ஆரவாரக் கூத்துகளாகவே போயின. பெரியார் ஈ. வே. இரா. அவர்களின் பின்பற்றிகளும் தங்கள் பெயர் முத்திரைகளை மாற்றிக் கொள்ளவில்லையானாலும் அவற்றிலுள்ள சொலவகங்களை மாற்றிக் கொண்டனர். அவர்களினின்று வெளியேறிய முன்னேற்றங்களோ, திசை மாறித் தங்கள் கட்சிக் கப்பல்களை வலித்துக் கொண்டுள்ளன. இந்நிலையில் திரவிட இன மரபை நிலைநாட்ட விரும்பும் எஞ்சிய தமிழர்கள் என்ன செய்வது? இந்தியத் தேசிய நீரோட்டத்தில் நீந்திக் கொண்டுள்ள அரசியல் கொள்ளைக்காரர்களை இனங்கண்டு, அவர்களின் போலி முகமூடிகளைக் கிழித்தெறிந்து, அவர்களின் கைகளைப்பிடித்து வெளியே இழுத்துவிடுவதே முதலில் செய்ய வேண்டுவது. இந்தியத் தேசியமும், அதற்கப்பால் உலகத் தேசியமும் பேசப் புறப்பட்டிருக்கும் மக்கள் கட்சியினர், இந்திரா பேராயத்தார், அர்சு பேராயத்தார் முதலிய அனைத்திந்தியக் கட்சி **'அமுக்கர்'**களையும் வரும் சட்டமன்றத் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்தல் வேண்டும். தென்னாட்டு அரசியலில் இவர்களின் பங்கு இங்குள்ள திரவிட இனமரபுக் கட்சிகளிடம் குட்டை குழப்புவதும் குழிகள் பறிப்பதுமே!

—**பெருஞ்சித்திரனார்.**

இலங்கை 'சுதந்திரன்' இதழில் 27-4-80-இல் வெளி வந்த கட்டுரை இது. தென்மொழி அன்பர்களுக்காக இங்கு வெளியிடப் பெறுகிறது.

# உரிமையே எண்ணம்! உழைப்பே கொள்கை! உண்மைவிளைவு தமிழீழம்!

—பெருஞ்சித்திரனார்.

உலகெங்கணும் உள்ள மேலாளுமை கொண்ட சின்னஞ்சிறு நாடுகளிலெல்லாம்கூட உரிமை உணர்வு எழுச்சி கொண்டுள்ள நேரம் இது. கடந்த கால வரலாற்று நிலைகளில் சிறந்தோங்கி யிருந்து, உலகப் பேரரசுகளில் ஒன்றாயிருந்த தமிழினம், தன் மடிமைத் தனத்தாலும் விழிப்பின்மையாலும், உலக முதன்மொழி யாகிய தன் தாய்மொழி தமிழையும், தன் பண்பாட்டையும், அரசிறைமையையும் ஒருங்கே தவறவிட்டுத் தன்னாட்சியிழந்து, ஆங்காங்கே மாற்றார் ஆட்சிக்குட்பட்டு, அடிமையுற்று மிடிமை சார்ந்து இன்று தன் உரிமை மீட்சிக்காகப் போராடி நிற்கிறது. இந்த நிலை பெரும் அவலம் மிகுந்ததாகும்.

மொழியாலும், இனத்தாலும், நாட்டாலும், பண்பாட்டு நாகரிக நலன்களாலும், கலைகளாலும், பொருளியலாலும் அடிமை கொண்ட இத்தமிழினத்தை மீட்டெடுக்க ஆங்காங்குத் தோன்றிய மொழி இனத் தலைவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெரும் போராட் டத்தை நடத்தி வருகிறார்கள்.

இப்போராட்டங்கள் தமிழகத்தில் அரசியல் குமுகாயப் போராட்டமாகவும் தமிழீழத்தில் விடுதலையுணர்வு கொண்ட உரிமை மீட்புப் போராட்டமாகவும் வடிவெடுத்து அணிதிரண்டு வருகின்றன. தமிழகத்தில் பெரியாரும் அண்ணாவும் கடந்த அரை நூற்றாண்டுக் காலம் நடத்திய இத்தமிழின உரிமை போராட்டத்தைக் குமுகாய வழியிலும் அரசியல் வழியிலும் நடத்தி ஓரளவு வெற்றி கண்டு வந்துள்ளனர்.

இலங்கையில் காலஞ்சென்ற தமிழீழப் பெரியார் செல்வா அவர் களின் வழியில் விடுதலை வேட்கைகொண்ட தலைவர்களும் இளைஞர் களும் முழு இறைமை சான்ற தமிழீழப் பொதுவுடைமைக் குடியரசை அமைக்கக் கடந்த முப்பது ஆண்டுகளாக அயராமல் பாடுபட்டு வருவது உலகறிந்த செய்தியாகும்.

கடந்த மூவாயிரம் ஆண்டுக் காலமாகத் தூங்கிக் கிடக்கும் ஒரு பேரினத்தைத் தட்டி யெழுப்பி விழிப்புணர்ச்சியை ஊட்டி விடுவ தென்பது அவ்வளவு எளிய செயலன்று. இருப்பினும் தம்மால்இயன்ற வரை கடந்த காலத் தலைவர்கள் தமிழகத்திலும் தமிழீழத்திலும் ஒரு போராட்ட மரபினத்தை உருவாக்கிச் சென்றுள்ளனர். இன்று அவர்கள் வழியில் ஆங்காங்குள்ள அரசியல் தலைவர்களாகிய கலைஞர் கருணாநிதியும், அமிர்தலிங்கமும் தமிழகத்திலும் தமிழீழத்

திலும் போராட்ட முன்னோடிகளாக விருந்து செயல்பட்டு வருகின்றனர்

இவ்வகையில் தமிழகத்தைக் காட்டிலும் தமிழீழத்தில் இப்போராட்டம் முழு வடிவில் உருப்பெற்று உலகெங்கணுமுள்ள ஏறத்தாழ பதின்மூன்று கோடித் தமிழர்களுக்கும் ஒரு விடிவை உண்டாக்கும் போராட்டமாகக் கால்கொண்டு வருகிறது.

தமிழீழத் தலைவர்களும் அவர்களைக் காட்டிலும் ஒருபடி மேலாக அங்குள்ள இளைஞர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு முழுமூச்சுடன் பல வகையிலும் உழைத்து வருவது ஒருவகை மனநிறைவையும் நம்பிக்கையும் ஊட்டுகிறது. மென்முறையும் வன்முறையும் சார்ந்த இவ் விருமுனைப் போராட்ட அமைப்பு கட்டாயம் இறுதியில் வெற்றியைத் தரும் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை. இருப்பினும் நம் போராடட முயற்சிகள் இன்னும் நன்கு திட்டமிட்ட வகையில் நடக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாததாகும்.

ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு முதன் முதலாக வேண்டுவது ஆழமான உரிமை உணர்ச்சியே. எந்த வகையிலேனும் உரிமை பெற்று முழு இறைமை சான்ற பொதுவுடைமைக் குடியரசை நிறுவுவதே நம் தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும். ஓர் உரிமை இயக்கத்தைப் பலவகையிலும் நசுக்கப் பாடுபடும் வல்லாளுமை ஆற்றல்களை எதிர்த்துப் போராடும் வகையில் இளைஞர்களும் தலைவர்களும் மிக்க மனவுறுதி கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். இடையிடையே கிடைக்கும் அரசியல் ஊதியங்களை எள்ளளவும் பெரிதாகக் கருதி விடாமல் உரிமை மீட்பு எண்ணத்தையே பெரிதாகக் கொள்ளும் தன்னலமற்ற தமிழீழ விடுதலை உணர்வே எல்லாருடைய உள்ளத்திலும் ஆழமாக வேரூன்றல் வேண்டும். நயவஞ்சகமான இணக்கப் பேச்சிலும் அவ்வப்பொழுது அறிவிக்கப்பெறும் சூழ்ச்சியான திட்டங்களிலும் மனத்தைப் பறிகொடுத்து விடுதலையுணர்வை எவ்வகையானும் நெகிழ விட்டு விடக் கூடாது.

ஓரினத்தின் விடுதலை இயக்கத்திற்கு உரிமை வேட்கை என்பது எவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்குமோ அவ்வளவில் அதனை அடிமைப்படுத்தி ஆளுமை செய்கின்ற மேலதிகார இனத்திற்கும் அதிகார வேட்கை ஆழமாக வேரூன்றியிருக்கும். அதனை அறவே அகற்றிவிடுவதென்பது மிகவும் கடினமே. எனினும் அக்கடினமான முயற்சியில் தங்களை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்ட உயிருக்குத் துணிந்த இளைஞர்களும் அவர்களைக் கொண்டு செலுத்தும் தலைவர்களும் ஒரு சிறிதும் பின்வாங்கி விடுதலோ சோர்வடைந்துவிடுதலோ அடிமைப்பட்ட இனத்தை மேலும் படுபாதாளத்திற்கே கொண்டு சேர்க்கும் தன்மையுடையன. எனவே எந்த நிலையிலும் அவர்களுக்கு நெகிழ்ச்சியே கூடாது.

போராட்ட முறைகள் காலத்திற்கேற்ப மென்மை வன்மை

சான்றவையாக இருக்கலாம். ஆனால் போராட்ட முயற்சியில் தளர்ச்சியே இருக்கக் கூடாது;

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து (குறள் 486)

என்பது போல் ஊக்கம் தளர்ந்து நிற்கும், அஃதாவது போராட்ட முயற்சிகளைக் காலங்கருதி அமைவுப்படுத்தி வைக்கும் ஒரு நிலை வந்தாலும் கூட அந்நிலை, அடுத்து நடத்தப் போகும் பெரும் போராட்டத்திற்கு ஆயத்தப்படுத்தும் ஒரு நிலையாக இருக்க வேண்டுமே யன்றி, தம் உரிமை எண்ணத்தை மழுக்கிக்கொள்ளும் முனைப்பற்ற ஒரு நிலையாக இருந்துவிடக் கூடாது.

தமிழீழ உரிமை முயற்சி, தமிழக உரிமை உணர்ச்சியைக் காட்டிலும் பலமடங்கு வளர்ந்து பெருகி வடிவாக நிற்கும் தன்மை யுடையது. அது கனன்றெரியும் ஒரு காட்டுத் தீப் போன்றது. அதனை அணைத்துவிடுவதென்பது ஆட்சி பீடத்திலுள்ளவர்களுக்கு அத்துணை எளியது மட்டுமன்று; இயலாததும் ஆகும். இந்த வகை யில் தமிழீழ இளைஞர்களின் ஈகவுணர்வும் மிகவும் பாராட்டப் பெறுவதாகும்.

இயல்பாகவே தமிழினத்திற்கிருக்கும் தன்னினக் கீழறுப்பு முயற்சிகள் ஒரு சிறு அளவில் தமிழீழத்தில் இருப்பினும், தமிழகத் தைக் காட்டிலும் தமிழின ஒற்றுமை தமிழீழத்தில் மிகச் சிறந்து, பொருளுணர்வு முறையில் தெளிவுடன் விளங்குகிறது.

இவ்விழிப்புணர்வு ஏற்படுவதற்குத் தமிழீழ மக்களுக்கு ஏற் பட்ட பேரழிவு முயற்சிகளே காரணியமாகும். தமிழகத்தில் அப்படி யொரு நிலை இன்னும் வந்து வாய்க்கவில்லையாதலின் அத்தகைய விழிப்பு சார்ந்த ஓர் ஒற்றுமையுணர்வு அங்கு ஏற்படவில்லை. இருப் பினும் இந்த நூற்றுண்டின் இறுதிக்குள்ளாகவேனும் தமிழகத்தி லும் இத்தகையதோர் உரிமையுணர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள உண்டு, எனவே, தமிழீழ மக்கள் தங்கள் உரிமை உணர்வுகளை நன்கு வரவழைத்துக் கொண்டது, காலத்தின் அழுத்தமான தேவையாகப் போய் விட்டது; இதனைத் தமிழின விடிவுக்கேற்பட்ட முன்னோடியான வாய்ப்பாகவும் கருதலாம்.

அடுத்து, உரிமை உணர்வு மிகுந்து எழுச்சி கொண்ட ஒரு விடுதலை இயக்கத்திற்குத் தேவையானது சலியாத உழைப்பே யாகும். இந்த வகையிலும் தமிழக இளைஞர்களைவிடத் தமிழீழ இளைஞர்கள் பலவாறும் மேம்பட்டவர்கள். கடந்த காலத் தமிழீழ விடுதலை யுணர்வுப் போராட்டங்களில், தங்கள் விலைமதிக்க முடியாத உயிர்களையும் பணயமாக வைத்து அவர்கள் ஈடுபட்ட முறை பெரிதும் பாராட்டத் தகுந்ததாகும்.

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளில் ஈடுபட்ட இளைஞர் களுக்கிருந்த இருக்கின்ற ஒரு மாபெரும் செயல் துணிவு நம் தமிழீழ இளைஞர்களுக்கு உண்டு. யாருடைய வீரவுணர்விலும் இவர்களின் வீர விடுதலை முயற்சிகள் சிறிதும் குறைத்து மதிப்பிடக் கூடியன

அல்ல. மாருக, விலைமதிக்க முடியாத அத்துணை பெருமை சான்றன. எனினும் நம் முயற்சிகள் இன்னும் கட்டுக்கோப்பாக அமையவில்லை என்றே நாம் மதிப்பிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

நம் இளைஞர்களிடம் ஆங்காங்கே சில நெகிழ்ச்சிகளும் உண்டு. கொள்கையடிப்படையிலும், விருப்பு வெறுப்பு வகையிலும் அவர்களுக்கிடையில் சிறுசிறு குழு வுணர்வுகள் தோன்றியுள்ளதை நாம் கருதிப் பார்க்காமலும் அதில் கவனம் செலுத்தாமலும் அதன் பொருட்டுக் கவலைப்படாமலும் இருந்துவிட முடியாது. இளைஞர்களின் தலைமைப் பொறுப்புகளில இருப்பவர்கள் இதனை நன்கு கவனித்துத் தக்க ஆய்வு செய்து வாகுபோகான முறையில் இந்த உணர்வைச் செப்பப்படுத்த வேண்டும்; கட்டுக்கோப்பான ஓரியக்கத்தைச் செழிக்க விடாமல் செய்வதும், சிதைப்பதும் இத்தகைய உள்முக உணர்வுச் சிதைவுகளே. புற நிலைத் தாக்குதல்களால் அவ்வளவு கேடுகள் வந்து விடுவதில்லை. அத்துடன் தலைவர்களுக்கும் இளைஞர்களுக்கு மிடையில் உள்ள கருத்து வேறுபாடுகளும் அகலல் வேண்டும்.

ஓர் இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள் தோற்றலாம். அவை இயக்கத்தைச் செழிப்புடையதாக்கும். மனவேறுபாடுகள் கூடாது; அவை இயக்கத்தை அழித்து விடும்.

இறுதியாக ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலை முயற்சி ஏதோ இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக மட்டும் அவர்களின் உரிமைபெற வேண்டும் என்ற அளவில் மட்டும் செய்யப் பெறும் முயற்சியாகக் கருதிக்கொள்ளக் கூடாது. இன்று உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நாற்பத்தைந்து நாடுகளில் சிதறிக் கிடக்கும் பழம் பெருந் தமிழினத்தை ஒன்று கூட்டி அவர்களுக்கென்று இவ்வுலகில் முழு இறைமை சான்ற ஓர் ஆளுமை கொண்ட நாட்டை அமைக்கின்ற முயற்சியாகவே இதைக் கருதுதல் வேண்டும் தமிழினம் இன்று நேற்றுப் பிறந்த இனம் அன்று; நீண்ட நெடுங்காலத் தொடர் வரலாற்றையும் உலகத்திலேயே மூத்த முதுமொழியையும் கொண்ட மிகப் பழம் பேரினமாகும். இவ்வினத்தைத் தூக்கி நிறுத்தும் பயனுள்ள தேவையான கட்டாயமான ஓர் உணர்வும் உரிமையும் சார்ந்த பெரு முயற்சியில் இந்தத் தலைமுறையிலுள்ள அக்கறையும் ஆர்வமும் அறிவும் நிரம்பிய மக்கள் ஈடுபட்டு வெற்றி காணுதல் வேண்டும். அவ்வாறு நாம் எதிர்பார்த்தபடி வெற்றி பெருமல் போனுல் அல்லது தோல்வியுறுவோமாஞல். இனி என்றென்றும் இவ்வினம் அடிமையாகவே கிடந்துழல வேண்டியிருக்கும் என்பதைத் தலைவர் செல்வாவின் 83-ஆவது பிறந்த நாளாகிய இன்று நாம் எல்லோரும் நன்கு மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய பெரும் முயற்சியில் நாம் அனைவரும் ஒருமுகமாகப் பாடுபட்டு வெற்றி பெற எல்லாம் வல்ல இறையருள் நமக்குத் துணை நிற்குமாக.

மலர்க தமிழீழம்! வளர்க உலகத் தமிழர் ஒற்றுமை!

## தென்மொழி அலுவலகத்திற்கு

## ஒரு புதிய மிதிவண்டி அன்பளிப்பு!



தென்மொழி ந. இளமாறன் தம் குழந்தைகளுடன்.

நெடுநாளைய தென்மொழி அன்பரும் புரக்குநரும், தமிழக விடுதலை மறவரும், சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டி, கீழ்மேட்டூர் நீர்மின் திட்ட இளம் பொறியாளரும் ஆகிய உயர்திரு. **தென்மொழி நா. இளமாறன்** அவர்கள், தம்மக்கள், செல்வி. **தமிழ்ச் செல்வி**யின் 5-ஆவது பிறந்த நாளை(25-3-80)யும், செல்வன். **பூங்குன்றனின்** 3-ஆவது பிறந்த நாளை(5-3-80)யும் ஒட்டித் **தென்மொழி** அலுவலகப் பயனுக்காக, உருபா. 650 மதிப் மதிப்புள்ளதும், எல்லாத் துணைப்பொருள்களும் கொண்டதுமான ஓர் **'எர்குலிசு'** மிதிவண்டியை **24-3-80-ஆம்** நாளன்று, அன்பளிப்பாக வழங்கியுள்ளார், என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பின் இளமாறன் ஆர்வமுடன் தம்மக்கள்<br>
இன்பப் பிறந்தநாள் எண்ணியே—நன்புதிதாய்<br>
வல்லமிதி வண்டி வயந்தளித்தார் தென்மொழிக்கே!<br>
நல்லவுளம் வாழ்க நயந்து.

இம்மாதச் சிறப்பு மடல்!

# மொழியுணர்வு-ஒரு வாழ்வியல் நிகழ்பாடு

அன்புடைய ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம் பலவும் உரிய.

வடக்கே, அசாம் பற்றி எரியத் தொடங்கி விட்டது. உரிமை எழுச்சி என்னும் உண்மை, மேற்பட்டு வெடிக்கத் தொடங்கி விட்டது. இந்தச் சூழ்நிலையில், நமக்கெல்லாம் ஒன்று நினைவில் எழுந்து நிற்க வேண்டும். அஃதாவது, 1965-இல் நம் தமிழகத்து மாணவருலகம்—தன் இயல்பூக்க உந்துதலால்—இந்தியை எதிர்க்க எழுந்தபோது, தமிழகத்திற்கு அடுத்த நிலையில், மறமுறை தழுவிய மொழியுரிமைப் போராட்டத்தில் முன்னின்றது இதே அசாம்தான் என்பது. இன்று, அந்த அசாம்—அன்றைய அந்த அசாமிய மாண வக் குரிசில்களின் வழித் தோன்றல்கள்—நம்மை, முழுவுரிமைத் தனிப் போராட்டப் படிமுறை வளர்ச்சியில் மிகமிக முந்திக்கொண்டு, தம் இலக்கை நோக்கி வேழநடை போட்டு முன்னேறிக் கொண் டுள்ளனர். அன்றைக்கு (1965-இல்) நம் அண்டையிலிருந்தும், திண்ணை தூங்கி வழிந்து கொண்டிருந்த 'திரவிட'ங்களுள் ஒன்றான கேரளாவுங்கூட இன்றைக்கு (முதலமைச்சர் நாயனார் ஆட்சியில்) எவ்வளவோ உறுதிப்பாட்டுடன் இனங்காக்கும் முயற்சிகளில் இறங்கிவிட்டது நாம்தாம் தவப் பிந்தி விட்டோம்; அரக்குப்போல் நம்மைச் சுற்றிப் பற்றி இறுகிப் படர்ந்துவிட்டுள்ள குல-மத—கட்சி வேற்றுமைக் கசண்டுகட்குள்ளேயே புதைந்து, அழுந்திப் போய்க் கிடக்கின்றோம்.

இந்த அசாமியரின் மொழி—யின வுணர்வுச் செம்மாப்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டி, ஒரு சோற்றுப் பதமாக ஒன்றுரைக்க விரும்பியே இந்த உணர்வு நிகழ்ச்சியை மடலாக வரைந்திடத் தலைப்பட்டேன்.

ஏறத்தாழ, 14 ஆண்டுகளிருக்கும்—(1966-இன் முற்பகுதி). வடார்க்காட்டு வேலூரில் தங்க நேர்ந்தபோது, ஓர் அசாமிய மேல் நிலை ஆராய்ச்சி மாணவ அறிஞருடன் பல நாட்கள் நெருங்கிப் பேசிப் பழகும்படி எனக்கு வாய்த்தது. அப்போது எனக்குக் கழி யிளமை; அவரோ கட்டிளம் பருவத்தர். அவரையொட்டிய நிகழ்ச்சி களின் நினைவலைகள், என் மொழி—யின—நாட்டு வினை நடை முயல்வுகளினூடே தொடர்ந்து என் அறிவிலும் நெஞ்சத்திலும் வந்து மோதிக்கொண்டே இருந்து வந்துள்ளன. இன்றும், என் முதிரிளமைப் பருவத்தில் நினைவுகூரும்போதும், அவை, நிமிர்ந்த ஊக்கத்தையே என்னுள் தந்துவிடுகின்றன...

அவர் பெயர்தான் இன்று நினைவில் இல்லை. அவருடைய உருவ மும் நடையும் பேச்சும் பசுமையாகத் தங்கி உள்ளன. (அவர்

தோற்றத்தில் உள்ள மங்கோலிய இனச் சாயல் ஒன்றே, இன்று அவரை நம்மினின்று பிரித்துக் காட்டும். அதைத் தள்ளிவிட்டால், அவர் 'நம்மவர்கள்' பலரினும் நமக்கு மிகவும் நெருங்கிய உணர்வு உறவுடையவராகி விடுவார்!) இப்படியாகச் செய்திக்கு வருவோம் :

அவ்வசாமிய மருத்துவரும் நானும் உரையாடுவது ஆங்கிலத்தில்—அவருக்குத் தமிழ் ஓரளவுதான் தெரியும். அவர், தம் உரையாடலில் அடிக்கடி "like crossing the seven oceans!-like crossing the seven oceans!" என்ற தொடரைப் பயன்படுத்துவார். ஆனால், ஆங்கிலம் நன்கு பேசும் அவர், அதிலுள்ள 'oceans' என்ற சொல்லை 'ஓசன்ஸ்' என்றே பலுக்குவார்! இவ்வாறே பிற சொற்களில் வரும் 'sh' ஒலியையும் நம் 'சகர' ஒலியாகவே பலுக்குவார். எனக்கு இதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்ற உறுத்தல் மிகவிருந்தும், அது அவரின் நாவணங்காக் குறையாக இருக்குமோ என்றெண்ணித் தயங்கிக் கொண்டிருந்தேன்.

பின் திடுமென ஒருநாள், என் முன்னிலையில், தம் உடன் மாணவர் ஒருவரைப் பெயரிட்டழைக்கையில்—அவர் பெயரில் உள்ள—'sh' ஒலியைத் திருத்தமாகவே ஒலித்து அழைக்கக் கண்டேன்! உடனே செவ்வி பார்த்திருந்து, அவர் (அசாமியர்) அருகில் வந்தவுடன் பிடித்துக் கொண்டேன் : 'sh' ஒலியை நன்கு பலுக்க முடிந்த நீங்கள், ஏன் ஆங்கிலச் சொற்களில் அதைத் தவிர்த்து விட்டு, 'சகர'மாக ஒலிபிறழ்ந்து பலுக்கி அம் மொழியமைவு சிதையும்படி பேசுகிறீர்கள்' என்று கேட்டேன். சிறிது நேரம் நக்குநின்று பின் நழுவிப் போகப் பார்த்தவர், நான் தொடர்ந்து வற்புறுத்தவே அதற்கான 'விளக்க'த்தை அளித்தார்! அதைப் பாருங்கள்! :

**அசாமியர் :** "அந்த 'sh' ஒலியை நான் மட்டுமில்லை, எல்லா அசாமியர்களுமே பொதுவாக ஒலிக்கமாட்டோம். ஏனென்றால், **அவ்வொலி எங்கள் அசாமிய மொழியில் இல்லை! எனவே, நாங்கள் அதைப் பலுக்குவதும் இல்லை!"** என்றார்.

**நான் :** "பின் இன்றைக்கு மட்டும் எப்படிப் பலுக்கலானீர்கள்?!"

**அவர் :** "அஃது என் தோழரின் பெயர்ச் சொல்லில் (proper name) வந்தது அல்லவா? எனவே, அவர் மனஞ் சுணங்காமைப் பொருட்டு அதை உரியபடி பலுக்கினேன்; அதுவும் எப்போதும் பலுக்குவதில்லை, ஒரு பத்து முறைக்கு ஒரு முறைதான் —தொலைந்து போகட்டும் என்று— பலுக்குவேன்!"

**நான் :** "அதென்ன, அவ்வொலி உங்கள் மொழியில் இல்லாவிட்டால் போகிறது; ஆங்கிலத்தில் இருக்கிறதே! அதை அப்படியே பலுக்கினால் என்ன குறைந்துவிடும்? பிறழ்ச்சியாகப் பலுக்கும்போது

அஃது அவ்வாங்கில மொழியின் இயல்பைக் கெடுக்கிறது; அருவருப்பாகவும் உள்ளதல்லவா?''

அவர் : (அவர்க்குக் கோபம் வந்து விட்டது!) "என்ன கெடுக்கிறேன்? என்ன அருவருப்பு, இல்லாத அருவருப்பு? **என் மொழியில் இல்லாத — அயன்மையான ஒலியை, எங்கட்கு இயல்பான ஒலிமுயற்சியினால் வெளிப்படலாகாத குரல் ஒலிப்பை, நான் ஏன், எவர் தேவைக்காக வீணான முயற்சியெடுத்து ஒலிக்க வேண்டும்?** அப்படி நாமென்ன அம் மொழிக்குச் சொந்தக்காரனான ஆங்கிலேயனிடமா நாளும் பொழுதும் பழகிப் பேசிக் கொண்டிருக்கிறோம்? நானும் நீங்களும் அசாமியரும் தமிழரும்தாமே? உங்கள் (தமிழ்) மொழியில் நான் ஏதேனும் குறை வரப் பேசுகிறேனா, சொல்லுங்கள்; கேட்டுக் கொள்கிறேன்! இன்னுஞ் சொல்லப் போனால், உங்கள் மொழியை நன்கு திருத்தமாகத் தெரியாமையினால்தானே, குறைபடும் என்றஞ்சி, நான் உங்களுடன் — உங்கள் நாட்டில் இருந்து கொண்டே, ஆங்கிலத்தில் பேசுகிறேன்! இல்லாவிடில், தமிழிலல்லவா உரையாடி மகிழ்ந்து மகிழ்விப்பேன்! உலக முழுவதும் அங்கங்கே, அவ்வப் பகுதி மக்களின் நாப்பழக்கத்திற் கிசையச் சிதைத்துப் பேசப்படும் ஆங்கில மொழி பற்றி ஆங்கிலேயனே கவலைகொள்ளாதபோது, நீங்கள் ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள்? நாங்கள் அப்படித்தான் பேசுவோம்! எங்கள் தாய்மொழிதான் எங்கட்குப் பெரியது! அதன் இயல்புகளின் படியேதான் எங்கள் நாப்பழக்கமும் இருக்கும்! யாருக்காகவும் நாங்கள் கவலைப்பட மாட்டோம்!'' என்று முழங்கினார்.

எப்படி இருக்கிறது? அவருடைய அசாம் மொழியில் இல்லை என்பதனால், ஆங்கிலம் என்ன கரிசு செய்தது?! இருந்தும் அவர்தம் ஆழ்ந்த உண்மையான தாய்மொழிப் பற்றிற்கு நான் தலைவணங்கித் தாழ்ந்து நின்றேன். இந்தியை எதிர்த்துப் போராடி 'முடிந்த' மதர்ப்போடு இருந்த எனக்கு இஃது ஒரு தன்னடக்கத்தையும் ஏற்படுத்தியது!

மேற்கண்ட அவ்வுரையாடலின்போது, எம்முடன் ஓர் இந்தி பேசும் பஞ்சாபிச் சீக்கியரும் உடன் இருந்தார். அவர் ஒரு பட்டாளத்து அதிகாரி; படைமேல்நர் (Major). திமிர்ந்த வடபுல மேலாவணமும் (northern superiority) துடிப்பும் உடையவர். பெரிய அடக்க முடியாத வாயாடி! ஆனால், நம் அசாமியர் அக்கருத்துகளைச் சரமாரியாகப் பொரிந்து தள்ளியபோது, இச் சீக்கியர் கண்டுங் காணாததுபோல் வாய்பொத்தியே வாளா இருந்துவிட்டார்!

இத்தகைய காழ்த்த மொழிப்பற்று ஊன்றிய உணர்வினர்களாகிய அசாமியர் இன்று தெற்காசியாவிலேயே மொழி — யின — நாட்டு உரிமை மீட்பு முன்னணிக் கோளரிகளாக விளங்குவதில்

வியப்புக்கிடமேது! அப்படி வியக்கினும் அவன் தமிழன் ஒருவனுகத் தான் இருப்பான்!

இவ்வாறு மொழித் தூய்மையை உயிரெனப் பேணுநராகிய இவர்கள் எங்கே? தட்டச்சில் தட்ட 'எளிமை' வேண்டுமென்று, முதுபழந் தமிழ வரிவடிவங்களைத் 'தறித்து நறுக்கிக் கட்டுக்கட்டி'ப் பார்த்துக்கொண்டிருக்கும் நம் 'கட்டுத்தறி'ப் பகுத்தறிவுத்தன மேதாவிகள் எங்கே? இதைப் போலவேதான், "மொழி சோறு போடுமா?" என்னும் மூங்கைவாயர் கூற்றும். மொழி என்பது உயிர் புரக்கும் மெய்ம்மம் அன்றோ? **உணர்வுடையவனுக்கு, அஃது உடல்வளர்க்கச் சோறும் ஏன் போடாது? ஓரினத்தின் வாழ்நிலமே அதன் மொழிவழித்தானே அவ்வினத்திற்கு உரிமையாகின்றது?**

இந்தப் புலனங்களின் தொடர்பாக இன்னொரு செய்தியையும் பகிர்ந்து கொள்ளாமல் அமைய முடியவில்லை. அசாமியர்கட்கு அண்டையில் உள்ளவர்கள் நாகர்கள். இந்தியா 'விடுதலை' பெறுவதற்கும் முந்தியிருந்தே, யார்க்கும் அடங்காது ஓயாமல் தங்களின் தன்னுரிமைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்கள். என்றைக்கும் அவர்களின் நாகநாட்டு (நாகாலாந்து) மாநிலத்தில், அவர்களின் துரத்தியடிக்கப்பட்ட இலண்டன்வாழ் தலைவர் பிசோவின் தூண்டுதலின் பேரில் ஓயாத போராட்டமும் புரட்சியும், கொரில்லாக் கிளர்ச்சியும், இவற்றுலாகிய உயிர்ச்சேத—பொருட் சேதங்களும், இந்திய மேலாளுமைக் குலைவும் இருந்து பெருகியும் வந்தது, தில்லிக்கு ஒரு நீங்காத தலைக்குத்தலாக மாறிவந்தது. இந்த நிலைகளை ஓரளவுக்கு ஆற்றுப்படுத்தி அமைவு செய்து கொள்ளற்கு என்று எடுக்கப்பெற்ற முயற்சிகளுள், 'காந்தி அமைதி நிறுவன'த்தின் பணியும் ஒன்று. அந்த அமைதி நிறுவனத்தின் நெடுநாள் தலைவராகிய தமிழறிஞர் பண்டாரகர் மு. அறம் அவர்கள், ஒருமுறை கோவையில், விழாக் கூட்டமொன்றில் ஒரு கமுக்கத்தை வெளிப்படுத்தினுர்: நாகநாட்டில் பேரளவிற்கு அமைதியை நிலைநாட்டித் தருவதில் வெற்றிகண்ட பெருமைக்காகப் பலராலும் தாம் பாராட்டப் பெறுவதைக் குறிப்பிட்ட அவர், உண்மையில் அதுபற்றிய எந்த வகைப் பாராட்டிற்குமே தாம் தகுதியுடையவராகார் என்று கூறி விளக்கினுர்—அதுவரை எவரின் அணுகுதலுக்கும் கட்டுப்பட்டு வராத நாகர்கள், தமக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருப்பதன் கமுக்கம் என்ன? தம்மிடம் என்ன மந்திர மாய ஆற்றலா உள்ளது? இல்லை. அவர்கள், **நாகர்களாகிய தாங்கள் தெனணுடுடைய தமிழர்களின் குடிவழியினத தோன்றல்களே என்று கருதுவதால்**, வேறெவர்க்கும் கட்டுப்படாத—வேறெவரையும் இம்மியும் நம்பாத நிலையில், தாம் (பர். மு. அறம்) **தமிழராக இருப்ப**

தனால், தம்மை அவர்களின் ஒட்டுறவாகவே நெஞ்சிருத்தித் தம்மீது பெருநம்பிக்கை பூண்டிருப்பதனால்தான் அவ்வெற்றியைக் காண இயன்றது; பார்க்கப் போனால், தமிழராகத் தாம் பிறந்துள்ளமை ஒன்றுதான் தமக்குரிய தகுதியாகும்! இல்லையேல், பிறரெவராகவும் இருந்திருப்பின் நாகர்கள் அவரையும் அவருடன் பணிசெய்வோரையும் உறுப்பு உறுப்பாகக் கழற்றிப் பிய்த்தெடுத்துக் காட்டு விலங்குகட்கு இரையாகப் போட்டிருப்பார்கள் என்று கூறினார்.

இப்படி நம்மையும் அறியாமல், நமக்கு உறவு கூறிப் பெருமை செய்யும் உடன்பிறந்த மறவரினத்தார் எங்கோ ஒரு மூலைக்காட்டில் இருந்து வருவதே நாம் செய்த தவப்பேறும். இனி, அவர்களின் வீர உணர்வுடன் நாமும் உணர்வொன்றி 'உரிமை மீட்பு' வினைகளில் இறங்கிவிட்டாலோ? சொல்லவே வேண்டுவதில்லை அவர்களின் களிப்பிற்கு! தமிழனின் குடிசெயல் முயற்சிக்குத் தெய்வம் போல் மடிதற்றுத் தாம் முந்துற வந்து தன்னம்பிக்கையும் ஒத்தாசைகளும் கரிசனத்தோடே அளித்திட மாட்டனரோ?

இன்றைக்கு, அந் நாகர்களில், தம் முதிய தலைவர் பிசோதில்லி வல்லாண்மையுடன் 'ஒத்து'ப் போகும் மோழைப் போக்குக் கொண்டு விட்டதால், அவரைத் தூக்கி யெறிந்து விட்டு இளந் தலைமுறையினர், தலைமறை வியக்க விடுதலைப் போரணியங்களைத் தாழாமல் மேற்கொண்டு காலம் நோக்கி உருற்றி வருகின்றனர்.

இந்த எடுத்துக்காட்டுப் படிப்பினைகளை எல்லாம், நாம் பாடம் படிப்பதும், 'நம்மவர்க'ளுள்ளும் இவ்வகையில் 'ஒத்து'ப் போகி வடதிசைக்கு ஒத்தூதும் 'கழக'த் தலைமைகட்குப் பாடம் கற்பிப்பதும் எந்நாளோ? விலங்கொடித்துச் சிறகார்ப்பதும் எந்நாளோ?

தமிழினமே எண்ணு! நினை! கருது! செயற்படு! விளையும்படி வினை விதை!

இப்படி நீள எழுதி, 'தென்மொழி'யின் அரும் பக்கங்கள் பலவற்றை விழுங்கி ஏப்பம் விட்டமைக்குப் பொறுத்துக் கொள்ளுங்கள்! என்றாலும், நம்மவர்களின் புளியேப்பச் 'செரியா (சேரா)க் குண'த்தை அகற்றும் சில 'நாட்டு'ச் சரக்குகள் இதில் அடங்கியுள்ளன என்னும் நம்பிக்கையுடனும், நாட்பட நாட்பட நெருடி நெருடி உள்ளத்தைக் குத்திக் குடைந்து வந்த ஓராயிரம் உறுத்தல்களுள், சிலவற்றைத் தாமும் விண்டெடுத்துப் பகுத்துண்ணக் கொடுத்துவிட்ட ஒப்புரவறிந்த பொந்திகையுடனும் முடித்துக் கொள்கின்றேன்!

சென்னை-15
19-4-1980

அன்புடன்,
**தென்மொழி மறை. நித்தலின்பன்.**

# செய்திகள்

## 1. திருக்குறள் மன்ற 2-ஆம் ஆண்டு விழா : பல்லடம்.

கடந்த மீனம் உச (6-4-80)-ஆம் பக்கல் மாலை 6 மணியளவில், பல்லடம் திருக்குறள் மன்றம் தனது 2-ஆம் ஆண்டு விழாவைச் சிறப்புடன் கொண்டாடியது. அவ்வமையம் மன்றப் **பூங்குயிலிசைக் குழுவினரின்** தமிழிசையரங்கமும், திருக்குறள் போட்டியில் வென்ற பள்ளி மாணவ, மாணவியர்க்குப் பரிசளிப்பும் பட்டி மன்றமும் நடைபெற்றன. நிகழ்ச்சி பல்லடம், பொங்காளியம்மன் கோயில் திடலில் நடைபெற்றது. தொடக்கத்தில், இசைக் குழுவினர் தென்மொழிப் பாடல்களைப் பாடினர். அடுத்து, திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகளைப் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** வழங்கினார். 7½ மணியளவில் பட்டி மன்றம் தொடங்கியது. நிகழ்ச்சிக்குத் தலைவராக ஈரோடு திருக்குறள் பேரவை அமைப்பாளர் உயர்திரு. **வேலா. அரசமாணிக்கனார்** தலைமை தாங்கி அரியதொரு முன்னுரையாற்றினார். பட்டி மன்ற நடுவராக உயர்திரு. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** வீற்றிருந்தார். பட்டி மன்றத் தலைப்பு: 'தூயவர் துன்பத்திற்கும், தீயவர் இன்பத்திற்கும் கரணியம் ஊழ்வினையே' என்னும் கருத்தை வலியுறுத்தி, திருச்சி தமிழ்ப் பேராசிரியர் திரு. **சோ. சத்தியசீலன்** க. மு., ப. இ. அவர்கள் தலைமையில் புலவர் திரு. **க. இளங்கோவன்** க. மு, புலவர் சிவத்திரு. **க. கு. சிவாச்சலம்** ஆகியோர் கருத்துரையாற்றினர். 'சூழ்நிலையே' என்னும் கருத்தை வலியுறுத்தி, மதுரைப் பேராசிரியர் திரு. **சுபாசு சந்திர போசு,** க. மு. அவர்கள் தலைமையில், புலவர் திரு. **க. சா. அப்பாவு,** க. மு. புலவர் திரு. **செந்தலை ந. கௌதமன்** க. மு. ஆகியோர் கருத்துரையாற்றினர், பட்டி மன்ற முடிவில், நடுவர் ஊழ்வினை என்ன என்பது பற்றியும், சூழ்நிலை என்பது என்ன என்றும் விளக்கியுரைத்து, ஒருவன் வாழ்வில் ஊழ்வினையின் பற்றுதல் வலிமை எவ்வெல்லையது என்றும், சூழ்நிலையின் பற்றுதல் வலிமை எத்தகையது என்றும் மெய்ப்பொருள் விளக்கம் கூறி, 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்' என்று தொடங்கும் குறளுக்கும் புதுப்பொருள் கூறி, 'ஊழ்வினையே' என்னுந் தலைப்பில் கருத்தாடிய அணியினரே கூடுதல் கருத்துகள் கூறினர் என்று தீர்ப்புரை வழங்கினர். பட்டி மன்றம் முடிய இரவு 1 மணியானது. இந்நிகழ்ச்சி தொடங்கியதும் எதிர்பாரா வகையில் ஓர் அரை மணிப் பொழுது மழை பெய்தும், அதன் விளைவாக நிகழ்ச்சியை வேறொரு நாளைக்கு அமைப்பாளர்கள் ஒத்தி வைத்தும், நிகழ்ச்சிக்குப் பேரளவில் வந்த

பெருமக்களாகிய ஆடவரும் பெண்டிரும், சிறு அளவில்தானும் கலை யாது, மழைக்கென ஆங்காங்கே கூரை யொட்டுகளிலும், கடை முன்றில்களிலும், தெருத் திண்ணைகளிலும் ஒதுங்கியிருந்து, மழை நின்றதும், ஓடி வந்து குழுமித் தரையீரம் புலராதிருந்தும். விசிப் பலகைகள் நனைந்திருந்தும், 'கூட்டத்தை ஒத்திவைக்கலாகாது; நடத்தியே தீருமின் நாங்கள் கேட்கிறோம்' என்று வேண்டிக் கொண்டு, இருந்து கேட்டது மிகவும் குறிப்பிடத்தக்க வியப்பானதும் பாராட்டக் கூடியதுமான செய்தியாகும். பல்லடம் மக்கள் கட்சி யுணர்வு நீங்கி அறிவுணர்வு பெற்று வருவதற்கு இந்நிகழ்ச்சி ஒரு நல்ல சான்றாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**2. காதணி (இலக்கிய) விழா—புதுவை :**

நிகழ்ந்த மேழம் 11 (23-4-80) அறிவன் மாலை 6 மணியள வில், புதுவைத் தட்டாஞ்சாவடி, மாரியம்மன் கோயில் தெருவில், புதுவைத் தனித்தமிழ்க் கழகச் செயலர் திரு. **தமிழ்மல்லன்** அவர்கள், தம் மக்கள் **தமிழ்க்கொடி, தமிழ்த்தென்றல், தமிழரிமா** ஆகிய மூவர்க்கும் நடத்திய காதணி விழாவை ஓர் இலக்கிய விழாவாகக் கொண்டாடினர். விழா பாவேந்தர் விழா வாகத் திகழ்ந்தது. விழாவிற்குப் **பாவலரேறு பெருஞ் சித்திரனார்** தலைமை தாங்கியிருந்தார். குடும்ப விளக்கில் பெண் ணின் பெருமை பற்றி அறிஞர் திரு. **தி. நா. அறிவுஒளி** க. மு. அவர்களும், 'முதியோர் வாழ்க்கை' பற்றி பேரா. **அ. பசுபதி க.** மு. அவர்களும், 'பகுத்தறிவு' பற்றி, திரு. **சி. தமிழ்மாறன்** க. மு. அவர்களும் உரையாற்றினர்கள். 'தமிழ் உணர்வு' பற்றி உரை யாற்ற விருந்த புலவர் **அரிமதி தென்னகன்**, தலைவர் பேசுதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொடுத்துத் தம்முரையைத் தவிர்த்துக் கொண் டார். முன்னுரையிலும் முடிவுரையிலும் தலைவரவர்கள் பாவேந் தரின் குடும்ப விளக்கின் அருமை பெருமைகளைக் கூறி, அரியதோர் உரையாற்றி விழாவைச் சிறப்புறச் செய்தார். தொடக்கத்தில் திரு. **தமிழமல்லன்** க. இ. அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

## பிற செய்திகள்

1. திருப்பூர், தமிழ் இலக்கிய மன்றத்தில் 'வேனில் விழா' கடந்த மேழம் முதல் நாள் காலை, முல்லை வீதி, வள்ளுவர் குடிலில், திருப்பூர் கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. பாவலர்கள் திருவாளர்கள், வே. இராசேந்திரன் (க. மு.), செல்வி கனகமணி, பொன்னுச்சாமி, பத்தவத்சலம், பாலசுப்பிரமணியம், கந்தசாமி, கோவிந்தராசு, கருப்புச்சாமி, சு. கிருட்டிணன் ஆகியோர் பல புதிய தலைப்புகளில் பாடல்கள் புனைந்து பாடினர். திரு. தமிழப்பன் நன்றிப் பாவிற்குப் பின் நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

2. புதுச்சேரி, தமிழ் காவற் குழு, கடந்த 18-4-80 அன்று புதுவை மாநில முதல்வரைக் கண்டு, 1979 ஆட்சி மொழியாண்டை ஒட்டிப் புதுவை அரசு திட்டமிட்ட தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற் கொள்ள வேண்டும், அனைத்துக் கல்லூரிகளிலும் மேனிலைக் கல்விக் கூடங்களிலும் தமிழைப் பயிற்று மொழியாக்குதல் வேண்டும், பாண்டிச்சேரி என்ற தவறான வழக்கை மாற்றிப் **புதுச்சேரி** என்றே எல்லா நிலைகளிலும் வழங்குதல் வேண்டும், திருவள்ளுவர் விழாவை அரசே பொறுப்பேற்றுச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும், என்று தொடங்கும் ஒன்பது தீர்மானங்களைத் தந்து, செயற்படுத்தக் கேட்டுக் கொண்டனர் என்று, அதன் செயலாளர் தெரிவிக்கிறார்.

## நன்கொடைகள்

1. கோவை, பூளைமேடு தென்மொழியன்பர் திரு. இரணியன் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 10-ஐ 5-4-80 அன்று விடுத்திருக்கின்றார். உள்ளம் நிறைந்த நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

2. வெங்காலூர், காந்தி அவர்கள் 14-4-80 அன்று தென் மொழிக்கு நன்கொடையாக உருபா 3 விடுத்துள்ளார். அன்புடன் பெற்றுக் கொண்டோம்.

---

வெளிவந்து விட்டது! விற்பனைக்குக் கிடைக்கிறது!

# பெருஞ்சித்திரனார் பாடல்கள் - கனிச்சாறு

**அரிய பாடற்களஞ்சியம்**

தொடக்கக் காலத்திலிருந்து 1978-ஆம் ஆண்டு வரை எழுதப் பெற்றுத் தென்மொழி, தென்றல், முல்லை, பகுத்தறிவு, தமிழ்நாடு, வானம்பாடி, செந்தமிழ்ச் செல்வி, விடுதலை, தமிழ்ப்பொழில் முதலிய இதழ்களில் வெளிவந்தனவும், வராதனவுமாகிய பன்னூற்றுக் கணக்கான தலைப்புகளில் ஏறத்தாழ 18000 வரிகள் கொண்ட ஆயிரக் கணக்கான பாடல்கள் ஒருசேரத் தொகுக்கப் பெற்று வந்த மூன்று தொகுதிகள்.

தீங்கனிச்சாறு! செந்தமிழ்த் தேனூறு!

என்றென்றும் வைத்துப் போற்றவேண்டிய
இலக்கியப் பாச்சுரங்கம்!

| | | |
|---|---|---|
| **முதல் தொகுதி** | **உரு.** | **15—00** |
| **2-ஆம் தொகுதி** | ,, | **11—00** |
| **3-ஆம் தொகுதி** | ,, | **17—50** |

பதிவஞ்சற் செலவுடன் மூன்று நூல்களையும் நூலஞ்சலில்
விடுக்க: உரு. 47—50

10 படிகள் வாங்குபவர்களுக்குக் கழிவு 10 விழுக்காடு
தென்மொழி, சென்னை-5.

# மருதம்

—புலவர். ச. சிவசங்கு, ஏரல்.

செந்தமிழ்ச் சான்றோர்கள் பாடியுள்ள பழந் தமிழ்ப் பாடலுள் மருதத் திணையையும் சுவைபடப் பாடி உள்ளனர். மருதத்தில் ஊடலும் கூடலும் விளைப்பான் வேண்டி, பரத்தை, காமக் கிழத்தி, சேரிப் பரத்தை முதலிய உறுப்பியங்களைத் தலைவனோடு சேர்த்து நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்து பாடுவர். தீயவராய் இல்லாதிருப்பினும், ஒழுக்கக் கேட்டுக்குக் கரணியராய் இருக்கும் அப் பரத்தை முதலியோர் பண்டையில் இருந்தனர். அங்கு மேட்டுக் குடித் தலைவர் சிலர் செல்வதும் இல்லாமல் இருக்க முடியாது.

இத் தீயொழுக்கத்தால் கோவலன் முதலியோர் அடைந்த பொல்லாங்கை நாம் அறியாமலில்லை. குமுகாயத்தில் உள்ள வாழ் வியலுக்கு இஃது எத்துணைத் தீங்கினை விளைவிக்கும் என்று நுணுகி உணர்ந்த சான்றோர், இத் தீயொழுக்கத்தைக் களைய வேண்டியே மருதப் பாட்டுகளை யாத்தனர். தலைவி, தோழி, பாணன், முதலி யோர் வாயிலாகக் கழறிக் கூறுதலே பொருளாக அமைப்பர். சுவை யின் பொருட்டுத் தலைவியே அவ்வொழுக்கத்தை ஏற்றவள் போன்று பாப் புனையினும் "கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும் உள்ளத் தூடல் உண்டென மொழிப" என்ற தொல்காப்பியர் நூற்பாவால், தலைவியின் ஊடலைத் தலைவன் உணர்வான் என்பதாம். மேலும் அவர் கற்பியலில், 'தாய் போல் கழறித் தழீஇக் கோடல், ஆய் **மனைக்** கிழத்திக்கும் உரித் தென மொழிப, கவவொடு மயங்கிய காலையான' என்றும் கூறுவர்.

தோழியும், "பரத்தைமை மறுத்தல் வேண்டியும் கிழத்தி
மடத்தகு கிழமை யுடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்" என்றதும்
தொல்காப்பியம்.

என்றிங்ஙனம் கூறித் தலைவனைத் தெளிவித்து நல்வழிப் படுத்துவதாகவே செய்யுள் யாக்கப் படும்.

மேற்கூறிய வாற்றால், ஆடவரும் மகளிரும், புறத்தொழுக்க மாய புன் செயல் நீக்கப் பாட்டிற் குரியது எனச் சான்றோர் கழறு முகமாய்ப் பாட்டிசைத்துளர் எனத் தெளியலாம். அவற்றுள் ஒன்று.

**"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்"**

செந்தாமரை மலரின் அக இதழை ஒத்த மாசற்ற உள்ளங்கை யும், பவளம் போன்ற அழகிய வாயினையும், கேட்போர்க்கு மகிழ்ச்சி யைத் தோற்றுவிக்கும், நாவால் திருந்தப் பேசாத மழலையாகிய

இன்சொல்லும், பொன் காப்பு அணிந்த கையினையும், பகைவராலும் விரும்பத் தகும் தோற்றமும் உடைய சிறுவனை;

**"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்**
**யாவரும் விழையும் பொலந் தொடிப் புதல்வன்,"** என

இவ்வாசிரியர், குழைந்த இனிய அம் மழலைச் சிறுவனின் தோற்றம் தம் சொல்லோவியத்தால் இனிது புலப்படுத்தமை அறிந்து மகிழத் தக்கது.

### தாய்

தாய், வீட்டு அலுவல்களைக் கவனிக்கச் சென்றபடியால், அக் குதலைச் செல்வன் முக்காற் சிறு தேரை உருட்டிக் கொண்டு அடுத்துள்ள தெருவிற்குப் போய் விட்டான். சிறுவனைக் காணாத தாய், மகனைத் தேடிக் கொண்டு வருகிறாள்.

**"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங் கிளையா**
**நாணி நின்றாள்"**

### பரத்தை நிலை

பொன்னாலான சிறந்த அணிகளைப் பூண்டுள்ள, தலைவனின் பரத்தையானவள் தேர்கள் வழங்கும் அத் தெருவில் சிறு தேரை உருட்டிக் கொண்டு வந்த சிறுவன், தன் அன்பிற்குரிய தலைவன் போன்று உள்ள முகத் தோற்றத்தைக் கண்டு சுற்றும் முற்றும் ஆளரவம் இன்மை தெரிந்து அருகு வந்து மிக மகிழ்ந்து **'வருக எம்மாள உயிரெனப் பொருந்தி,** வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்ட பொழுது, தாய் தேடிச் சென்றவள் இந்நிலை கண்டு நின்ற நிலையுடையவளாய் விரைந்து சென்று, அப் பரத்தையை அணைத்து **'மாசில் குறுமகள் எவன் பேதுற்றனை, நீயும் தாயை இவற்கு'** என அவளிடம் கூறினாள்.

கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்ட ஒரு கள்ளன் நம் மனக் கண் முன் தோன்றுவது போல உவமம் கூறி 'களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங் கிளையா நாணி நின்றோள்' பரத்தை சிறுவனைக் கீழே இறக்கி விட்டுத் தலைகவிழ்ந்து நாண மிகுந்து காலால் நிலத்தைக் கீறிக் கொண்டு நின்றாள்.

தலைவி, தலைவனை நோக்கி, 'கற்பிற் சிறந்தாள் எனப்படும் வானத்து அருந்ததி அன்னாள் உமது மகனுக்கு அவளும் தாயாதல் ஒக்கும் என யானும் அவளை விரும்புதலோடு நடந்து கொண்டேன்; நீயிர் புறத்தொழுக்கம் இலாதார் போல உள்ளீர்! இது என்னவோ' என்றனள்.

இதற்குத், தன் செயற்குப் பெரிதும் நாணி **'பெருமையும் தன்னைத் தான் கொண்டொழுகின் உண்டு'** என்ற மேலாம்

# ‘தனித்தமிழியக்கத்தின் பின்னணி’

—க. தமிழமல்லன், க. இ.

தனித்தமிழ் பற்றி எதையுஞ் சரியாய்க் காணுமலே கண்டதி லும் கழுதை வாய் வைப்பது போலும், பதவி பெற்ற அரசியற்காரர் எல்லா அவையிலும் எல்லாந் தெரிந்தவராய்ப் பேசுதல் போலும் புலவரிற் சிலரும் நூலாருட் சிலரும் இதழாருட் சிலரும் இயங்கி வரும் தனித்தமிழ் இயக்கம் பற்றி அவ்வப்போழ்து அகல வாயவிழ்த்து வருகின்றனர்.

அத்தகையோர், தனித்தமிழியக்கத்தைக் கட்சி இயக்கம் போற் கருதிக்கொண்டு பிறழ்வான பின்னணிகளைக் காட்ட முயன்று வரு கின்றனர். அதிலும், ‘தனித்தமிழ்தான் தேவை’ என்று கரடியாய்க் கத்திய சிலரும் தேசியம் பேசி அயலகப் பயண வாய்ப்புப் பெற்றுப் பாரிசிலும் இலண்டனிலும் சென்று ‘சுத்தத் தமிழ்’ வேண்டாவெனச் சொல்லி வருகின்றனர்.

எது தனித்தமிழ் என்றும் எவர் தனித்தமிழ் இயக்கத்தார் என் றும் விளங்கிக் கொள்ளாமலேயே, தனித்தமிழுக்காகவே கடந்த இருப தாண்டுகளாய் இயங்கி வரும் ‘**தென்மொழி**’யை மேற்கோளாய்க் கொள்ளாமலே, சுப்பிரமணிய சிவாவைத் தனித்தமிழியக்கத்தின் ஒரு பெரும் பிரிவின் தலைவராகவும் கருதி நூலெழுதத் துணிந்திருப்பது வேடிக்கையினும் வேடிக்கை!

தமிழ்ப்பற்று நிறைந்த அறிஞர்களை ‘நடைமுறை உலகுடன் நடக்காதவர்’ என்று ஒரு கூட்டம் இகழ்ந்து வந்தது. அவ்வாறு குறை கூறும் முனைப்பினர் தனித்தமிழ் இன்று ஈட்டியுள்ள வெற்றி யினை—நடைமுறையை அறவே புறக்கணித்து விட்டுக் கற்பனை உலகினின்று கதை அளந்து திரிவதை நற்றமிழர் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

‘தனித்தமிழியக்கம்’ என்னும் பெயரில் தலைவர், செயலருடன், சட்டதிட்டங்களுடன் எப்போதும் தமிழகம் தழுவிய ஓர் அமைப்பு

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பண்பாட்டை உணர்ந்து, தலைவிக்குப் பரத்தையை ஏத்தினும் உள்ளத்திலே ஊடல் உண்டு என அறிந்து, அப் புறத் தொழுக்கம் நீங்குவானுதல் பயனுகும்.

இவ் வழகோவியக் கருத்துச் செறிந்த கசுஎ-ஆவது மருதப் பாடலை வழங்கிய பெருந்தகு சான்றோர் **சாகலாசனுர்** என்பார். தலைவி, தலைவன் பால் உண்டாய நன்றல்லாத தீயொழுக்கத்தை மிகவும் நாகரிகமாகக் குத்திக் காட்டித் திருத்து முறை வேறு எம் மொழி இலக்கியத்தில் காண வியலும்? **0**

இருந்ததில்லை. 'தனித்தமிழ்த் தந்தை' மறைமலையடிகளாரின் உள்ளத்தில் தோன்றிய ஓர் உணர்வு செயலாகி அவரது குடும்பத்தில் பல மாறுதல்களை ஏற்படுத்திய பின்; அவ்வுணர்வு சரியானதாகவும் தேவையானதாகவும் நடைமுறையில் கொண்டுவரத் தக்கதாகவும் நல்லோர் உணர்ந்த பின்; அவ்வுணர்வு தமிழகம் முழுவதும் பரவி, சமயம், இலக்கியம், கல்வி, அரசியல் முதலிய அனைத்துத் துறைகளிலும் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது!

**தனித்தமிழியக்கத்தவர் :**

தனித்தமிழ் உணர்வை விளங்கிக் கொண்டு அதைச் செயற்படுத்தப் பலரும் பலகாலங்களிலும் முயன்றும் உழைத்தும் வந்துள்ளனர். அவர்கள், இன்ன குலத்தினர், இன்ன சமயத்தினர், இன்ன கட்சியினர் என்ற வேறுபாடுகளை நிலையாகக் கொள்ளலாகாது. தமிழின முழுமைக்கும் உரியது தனித்தமிழியக்கம்.

தனித்தமிழுணர்வுடன் தமிழருட் பல சமயத்தவரும் பல கட்சியினரும் செயற்பட்டு வந்தனர், வருகின்றனர். பொதுவுடைமைக் கொள்கையரும் பேராயக் கட்சியினரும் திரவிட இயக்கத்தவரும், கடவுள் உண்டென்பாரும் இல்லென்பாரும் அனைவரும் இதில் இயக்கமுள்ளவராகக் காண்கின்றனர்.

தனித்தமிழ் உணர்வைப் புரிந்து கொண்ட பிற மொழியினராகிய தெலுங்கரும் மலையாளியருங் கூட இங்குறையும் நிலையில் தனித்தமிழுக்கு ஆக்கமே விளைத்து வருகின்றனர்.

பார்ப்பனர் பலரும் ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால் அவர்களைச் சேர்ந்த 'சூரிய நாராயண சாத்திரியார்' தமது பெயரை மாற்றிக் கொண்ட அளவிலேயே அவர் 'ஆகா ஓகோ'வென்று புகழப்படுதல் முற்றிலும் ஏலாதவொன்று. நம்மியக்கத்துக்கு 'அரசியற் பின்னணி' கற்பிக்க முயன்ற **சிவத்தம்பி** பரிதிமாற்கலைஞரைப் போற்றும் வகையிலும் மறைமலையடிகளாரை இழிவாகத் தூற்றும் வகையிலும் எழுதியிருப்பது அவரது தவறான கண்ணோட்டத்தையே காட்டும்.

**தனித்தமிழியக்கமும் பார்ப்பனரும்**

எவ்வகையான புத்தியக்கத்திலும், ஊடுருவி இருக்கைகளைப் பிடித்துக் கொள்வதும் அதில் தம்மவரை நிரப்பிக் கொள்வதும் வழக்கமாகக் கொண்ட பார்ப்பனர் பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்திலும் மறைமலையடிகளின் தனித்தமிழியக்கத்திலும் குறிப்பிடத் தக்க அளவிற்கோ தலைமை நிலையிலோ இடம் பெறவில்லையே! ஏன்? பொதுவுடைமை இயக்கத்தைக் கூடத் தங்கள் கையில் வைத்திருக்கிற இவர்கள் இவ்விரு இயக்கங்களிலும் ஈடுபடாமைக்குக் கரணியங்களைத் துன்புற்றுத் தேட வேண்டியதில்லை. அனைவரும் அறிந்தவையே!

பிறவியினுல் பிறரைத் தாழ்த்தித் தம்மை உயர்த்திக் கொண்ட பார்ப்பனர், பிறவி வேறுபாட்டைக் களையவேண்டும், அதனுல் உண்டான இழப்புகளை ஈடுகட்ட வேண்டும் என்னும் பகுத்தறிவியக்கத்தில் ஈடுபட்டால் அவர்களுக்கு இருக்கிற வாய்ப்புகள் அனைத்தும் அழியும் என உணர்ந்து கொண்டனர். தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளவோ, தாங்களே விரும்பித் தாழ்த்தப்பட்டவரைக் கரை சேர்க்கவோ எப்போதும் விரும்பியதில்லை. பார்ப்பனருள் ஒருவர்கூட இவ்வுணர்வில் திளைத்து வினைப்பட்டாரிலர். அவர்களும் மக்கள்தாம் எனில் அவர்களுள் ஒருவருக்குக் கூடவா பகுத்தறிவியக்கத்தின் நயன்மை விளங்காமற் போய்விட்டது?

அதுபோல், தனித்தமிழியக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டுத் தமிழ்நாட்டில், 'பார்ப்பனர்தாம் இதிற் சிறப்புற விளங்குகின்றனர்' என்றுக்க அவர்கள் முனையவில்லையெனில் இதிலும் ஒரேவகையான அடிப்படைதான் இயங்குகின்றது. அஃதாவது, தமிழிற் பிற சொற்களென, வட சொற்களை அளவிறந்து வேண்டுமென்றே கலந்தவர்களான பார்ப்பனர்கள் தாங்களே முன்வந்து நீக்குதல் தங்களுக்கு அழிவுண்டுபண்ணும் செயலாகக் கருதுதல் இயல்பே! மேலும் தமிழ்நாட்டுப் பார்ப்பனரோ அன்றி வேறு எப்பார்ப்பனரோ வடமொழி வாயிலாய்த் தம் வாழ்வை வளப்படுத்திக் கொண்டுள்ளனர். வடமொழியே தேவமொழி என்பதில் இன்றும் அவர்கள் நிலையாக இருக்கின்றனர். எனவே அத்தகு மொழிச் சொற்களை நீக்க அவர்கள் முன் வராதது வியப்பானதன்று.

எனினும் தமிழின் தனித்தன்மைகளுள் ஒன்று, அதைக் கற்ற எவரையும் தன்பால் முழுமையாகக் கவருவதாகும். சி. யூ. போப் அவர்களைத் தமிழ் மாணவன் என அவர் கல்லறையில் பொறிக்கச் சொல்லுமாறு செய்தது! "இமையோர் விருந்தமிழ்தம் என்றுலும் வேண்டேன், இருந்தமிழே உன்னுல் இருந்தேன்" எனப் பாவலர் ஒருவரைப் பாடச் செய்தது. வங்கப் பார்ப்பனரான சுநீதிகுமார் சட்டர்சியை **'நன்னெறி முருகன்'** எனப் பெயர் மாற்றம் செய்து கொள்ள வைத்தது. அவ்வகையில் தமிழ் மொழியைக் கற்ற அனைவரையும் நம் தமிழ்மொழி ஈர்த்துள்ளது; அவர்களை மாறச் செய்தது; அவர்களின் மிகச் சிறிய தற்கால மாற்றங்கள்தாம் 'பரிதிமாற் கலைஞரும்' 'பாரதியாரின் தமிழ்ப் பற்று'மாகும். பிற பார்ப்பனப் புலவரும் தமிழைக் கற்று அதில் திறமையுடையவராய், அதில் பற்றுடையவர் போலிருக்கின்றனர் எனில், கிறித்துவர் தமிழ் கற்று அவர்தம் சமயத்தைப் பரப்ப முயன்றது போலவே இதையும் கொள்ள வேண்டும். பேசும் மணிப்பொறி வரவிருக்கும் இக்காலத்தில் கூட பாரதத்தையும், இராமாயணத்தையும் விடாமல் படம் போட்டு எழுதித்தள்ளும் கல்கியையும், கலைமகளையும் காண்பார் எவரும் தமிழை அவர்கள் எதற்குப் பயன்படுத்துகின்றனர் என்பது

எளிதில் விளங்கும். 'தென்மொழி'யோ, 'விடுதலை'யோ தமிழ்மொழியைத் தமிழின விழிப்புக்குப் பயன்படுத்துகிற அதே வேளையில், தமிழ்மொழியை அழிப்பதற்கென்றும் தமிழரே தமிழைப் புறக்கணிக்குமாறு செய்வதற்கென்றுமே அவர்கள் தங்கள் கைகளில் வைத்துள்ள எல்லா ஏடுகளையும் ஒருசேரப் பயன்படுத்தி வருவதை இன்னும் நம்மவர் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை! என் செய்வது?

இவ்வாறு தமிழ்கற்ற எல்லாரையும் ஈர்த்த தமிழ் அனைவர்க்கும் தனது தனித்தியங்கும் தன்மையை உணர்த்தியதன் விளைவுதான் பார்ப்பனர் சிலர் தனித்தமிழ் மாண்புணர்ந்ததாகும். எனினும் இது வரை பார்ப்பனர் எவரும் தனித்தமிழ் வளர்க்க உழைத்ததாகவோ, உழைப்பாரை ஆதரித்ததாகவோ கூற முடியாது! சிறுகதை எழுதுபவர், வீடு புகுந்து கொலை செய்தவர், விடுதிகளில் தொழில் நடத்தும் விலைமகளிர், அம்மாமி எழுத்தாளர்கள் இவர்களை யெல்லாம் நேருரை கண்டு, நடிகையரின் கால்வேறு தலை வேறாகப் பிரித்துப் படம் போட்டுப் பொருத்துமாறு எழுதுகின்ற எத்தனையோ ஏடுகள், பெயர்ப்பலகைத் தமிழாக்க வெற்றி பற்றியோ, தனித்தமிழில் வெளியாகும் நூல்கள் பற்றியோ, தனித்தமிழியக்கத் தலைமைத் தமிழறிஞர் மறைமலையடிகளார் பற்றியோ, பாவாணரைப் பற்றியோ ஒரு சிறிதும் எழுத முன்வராதது மிகவும் கண்டிக்கத்தக்கதாகுமன்றோ?

தொடக்கத்தில் தமிழை நன்கு பயின்று அதில் தோய்ந்திட முயன்ற தீபம் நா. பார்த்தசாரதியும் தமிழ் வயப்பட்டிருந்தார். எனவே அவர், அப்போது கூறிய கருத்துகளுக்கும் இப்போது 'திருவாய் மலர்ந்து வரும்' கருத்துகளுக்கும் நிரம்ப முரண்பாடு காணப்படுவதில் வியப்பில்லை. இப்போது பார்ப்பனராக மட்டுமே உள்ள தீ. நா. பா. பார்ப்பனத் தமிழராக இருந்தபோது எழுதிய கருத்துகளைப் படித்தால், பிற்காலத்தில், நா. பார்த்தசாரதியும் தனித்தமிழியக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் அதற்காக நிரம்பப் பாடுபட்டார் என்றும் எவனுவது எழுதித் தள்ளிவிடுவான்! 'தீ. நா. பா' எழுதினர் :

"மனிதன் வணங்க வேண்டிய முதல் இறைவன் கடவுள். அதற்கு அடுத்தது மொழி. மொழி தெய்வீக ஆற்றலின் விளைவு. **மொழியைத் தூய்மை செய்யத் தவறுகின்றவன் மனித வாழ்வின் பயனில் பெரும் பகுதியை வீணாக்குகிறான்** என்றுதான் சொல்ல வேண்டும்."[1]

"பல்லாண்டுகள் தவஞ்செய்து பெறவேண்டிய **வீடுபேற்றைத் தூய மொழியறிவு ஒன்றே நல்கிவிடும்** ஆற்றல் வாய்ந்தது."[2]

தாய்மொழி இலக்கண இலக்கியங்களைத் துளக்கறக் கற்றுத் தூய பேச்சும், வழுவற்ற எழுத்தும் பெறவேண்டும்,[3] (தொடரும்)

1, 2, 3 சொல்லின் செல்வம்—நா. பா. பக்—262, 263.

# பாரதிதாசன் பாடல் தொகுதியில் பாட வேறுபாடு

—பர். ச. மூ. இளங்கோ, க. மு.

பாட வேறுபாடு என்பது நூலாசிரியர் எழுதியவற்றைப் பல பதிப்புகளோடு ஒப்பிட்டு, அதன் தவறுகளையும் குழப்பங்களையும் தெளிவுபடுத்துவது ஆகும். [1]

கழக இலக்கியங்களிலேயே நாம் பாட வேறுபாடுகளைக் காண் கிறோம். எட்டுத் தொகை, பத்துப் பாட்டு திருக்குறள், மணிமேகலை, கம்பராமாயணம், பெரிய புராணம், கலிங்கத்துப்பரணி முதலிய நூற்களில் காணப்படும் பாட வேறுபாடுகள் குறித்து அறிஞர் பெருமக்கள் நூல்களின் வாயிலாகவும் கட்டுரைகளின் வாயிலாகவும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளனர்.[2] பொதுவாகப் பாட வேறுபாடு பெறாத தமிழ் நூலே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்குத் தமிழ் நூற்களில் பாட வேறுபாடு இரண்டறக் கலந்துள்ளது.

ஆங்கில இலக்கியத்தில் குறிப்பாக எலிசபெத் காலத்தில் தோன்றிய மார்லோ, சேக்சுபியர் முதலியோரின் நாடகங்களில் பாட வேறுபாடுகள் நிறைந்து காணப்படுகின்றன. நாடகத்தைப் படியெடுத்தோர் படித்த போதும் எழுதிய போதும் நிகழ்ந்த பிழைகள், அவர்கள் வேண்டுமென்றே செய்த மாற்றங்கள் முதலி யவை அதற்குரிய காரணங்கள் ஆகும். மேலும் அச்சடிக்கப்பட்ட நாடகங்களைத் திருத்த எவரும் அதிக அக்கறை எடுக்கவில்லை. அச்சடிக்க எடுத்துக்கொண்ட தாள்களோ மிகவும் மோசமானவை. நாடகத்தைப் படைத்தவனே படைத்தவர் பலரோ இணைந்து அவற்றில் திருத்தங்கள் செய்திருக்கின்றனர். அத்தோடு நாடக அரங்குத் திருத்தங்களும் சேர்ந்தன. [3]

இவ்வாறு பாட வேறுபாடுகள் ஆங்கில இலக்கியத்தில் ஒருகால் ஆதிக்கம் செலுத்தின. ஆயினும் தற்போது பிழையில்லா மல் நூற்களை அச்சடிப்பதில் முனைந்து செயலாற்றுகின்றனர்.

அச்சுப்பொறியும், பிற அறிவியல் கருவிகளும் வாய்க்கப் பெறாத அந்நாளில், பாடல்கள் வாய்மொழி வாயிலாகக் கேட்டும், ஏட்டில் எழுதப்பெற்றும் வந்தன. எனவே பழந்தமிழ் இலக்கியங்

---

1. M. H. Abrams, A clossary of literary terms, Third Edition, (Delhi, 1971) P. 38.

2. மு. சண்முகம், திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறு பாடும், முதற் பதிப்பு (சென்னை, 1971) பக். 101-103.

3. ரெனிவெல்லக்—ஆசுடின் வாரன், இலக்கியக் கொள்கை (தமிழாக்கம்) முதற் பதிப்பு (சென்னை, 1966) பக். 74-76.

களில் பாட வேறுபாடுகள் காணப்பெறுவதில் வியப்பில்லை. ஆனால் எல்லா அறிவியல் வாய்ப்புகளும் வாய்க்கப்பெற்ற இன்றைய நூற்றாண்டில் வெளிவரும் தமிழ் நூற்களில் பாட வேறுபாடுகள் காணப்படுதல் நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது.

அச்சுப் பிழைகள் இன்றி நூல் வெளிவர மேனாட்டார் முயலும் போது, நாம் அச்சுப் பிழைகள் நீக்கமற நிறைந்து, அதனால் பொருள் திரிபுபடும் நூற்களையே வெளியிடுவதில் பெரிதும் கவனம் செலுத்துகிறோம். இவ்வாறு பிழையாக அச்சடித்து நூற்களை வெளியிடுதல் நமது பொறுப்பின்மையையும், கவனக் குறைவையும் காட்டுகிறது.

இக்காலத் தமிழ்ப் பாடல்களையும் இந்தப் பாட வேறுபாடு எனும் பிணிபிடித்துப் பொருட் குழப்பத்தை ஏற்படுத்தித் தன்னால் இயன்ற மருட்கியைச் செய்து வருகிறது.

பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பாட வேறுபாட்டைக் கடிந்து எழுதிய பாரதிதாசன் பாடல்களும் பாட வேறுபாட்டில் இருந்து தப்பவில்லை.

பாரதிதாசன் படைப்புகளிலே பெரிதும் பாட வேறுபாடுகளைக் கொண்டு விளங்குவது, 'பாரதிதாசன் கவிதைகள்'—தொகுதி இரண்டு ஆகும். எனவே அந்நூலில் காணப்படும் பாட வேறுபாடு களைக் குறித்து ஆய்வோம்.

'பாரதிதாசன் கவிதைகள்'—இரண்டாம் பகுதியின் முதற் பதிப்பு ஏப்ரல் 1949-இல் புதுச்சேரியில் உள்ள பாரதிதாசன் பதிப் பகத்தார் சார்பாக ரூ. 1-4-0 விலையில் வெளியிடப் பெற்றது அம் முதற் பதிப்பு நூலுக்கு வழங்கிய முன்னுரையில்,

"ஏறத்தாழ இருபது ஆண்டுகளின் முன் தொடங்கி இன்று வரைக்கும் சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் முதலிய பல ஏடு களில் வெளிவந்த என் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். இது போன்ற தொகுப்பு நூல் முன்னுள் ஒன்று 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற பெயரில் வெளிவந்துள்ளமையால் 'பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் பகுதி' என வெளியிடலாயிற்று'' எனவும், 1952-இல் வெளியிடப்பட்ட இரண்டாம் பதிப்பு முன்னுரையில்,

"ஏறத்தாழ இருபது ஆண்டுகளின் முன் தொடங்கி நான் எழுதிய தனிப் பாடல்களின் தொகுப்பே இதுவும்! ஆதலின் இதன் பெயர் 'பாரதிதாசன் கவிதைகள் தொகுதி இரண்டு' எனலாயிற்று. 'பாரதிதாசன் கவிதைகள் தொகுதி ஒன்று' வெளிவந்துள்ள தல்லவா? இது இரண்டாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பு. இன்னும் தனிப்பாட்டுக்கள் இருக்கின்றன. அவைகளையும் தொகுத் துத் தொகுதி மூன்று என வெளியிட எண்ணியிருக்கின்றேன், எதிர்

பார்ப்பவர் மிகப் பலராதலின்'' எனவும், **1956**-இல் வெளிவந்த மூன்றும் பதிப்பு முன்னுரையில்,

''இரண்டாம் தொகுதியின் மூன்றும் பதிப்பு இது. மூன்றும் தொகுதியும் **1955**-இல் வெளிவந்துள்ளது'' எனவும் கூறியுள்ளார்.

இங்கு எடுத்துக் காட்டிய முன்னுரைகளிலிருந்து, அறியவரும் முகாமையான செய்திகள் வருமாறு :

(1) பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்கள் சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்திலும் இன்ன பிற ஏடுகளிலும் வெளியிடப்பெற்ற உதிரிப் பாடல்களின் தொகுப்பே ஆகும்.

(2) 'பாரதிதாசன் கவிதைகள் மூன்றும் தொகுதி' வெளியிடப் போகும் செய்தியை இரண்டாம் பதிப்பிலும், வெளியிட்ட செய்தியை மூன்றும் பதிப்பிலும் பாரதிதாசன் புலப்படுத்தியுள்ளார்.

**சேர்த்தல்:** **1952**-இல் வெளிவந்த இரண்டாம் பதிப்பில், 'முதல் பதிப்பில் இடம் பெருத பல பாடல்கள் புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளன' என்னும் செய்தியைப் பாவலர் குறிப்பிட்டுள்ளார். அங்ஙனமாயின் புதிதாகச் சேர்க்கப்பெற்ற பாடல்கள் யாவை என் பதை நோக்குவோம். இன்றையப் பதிப்புகளில் காணப்படுகின்ற, 'காதல் வாழ்வு' 'சிறுத்தையே வெளியில் வா' 'தீபாவளி' 'பந்துபட்ட தோள்' 'தன்மான உலகு' 'திருமணம்' 'கதவு பேசுமா?' 'குழந்தைப் பள்ளிக்கூடம்' 'வள்ளுவர் வழங்கிய முத்துக்கள்' 'இசைபெறு திருக்குறள்' 'இயற்கைச் செல்வம்' 'இரு சுடரும் என் வாழ்வும்' 'தென்றல்' ஆகிய பாடல்கள் முதற் பதிப்பில் இடம் பெற வில்லை. இவையனைத்தும் பின்னர் வந்த பதிப்புகளில் சேர்க்கப் பட்டுள்ளன.

**நீக்கல்:** முதல் பதிப்பில் இடம் பெற்றுப் பிற பதிப்பில் நீக்கப்பட்ட பாடலேனும் உண்டா? என்று இனி நோக்குவோம்.

முதல் பதிப்பில் 'பன் மணித்திரள்' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள 'கோயிலுக்கு ஏசுநாதர் வரவில்லை' எனும் பாடல் பின்னர் வந்த பதிப்புகளில் நீக்கப்பெற்று விட்டது.

அப்பாடல் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுப்பில் இடம் பெற்றுள்ளதால் பிற பதிப்புகளில் நீக்கப்பட்டது போலும்.

**மாற்றம்:** (1) முதல் பதிப்பில் 'தமிழன்' என்னும் தலைப்பு, பிற பதிப்புகளில் 'திராவிடன்' எனப் பெயர் மாற்றம் செய்யப் பெற் றுள்ளது.

(2) முதற் பதிப்பில் 'நான் மாவலிபுரம் சென்றமை!' என்னும் பாடல் தலைப்பு, பிற பதிப்பில் 'மாமல்லபுரம்' எனச் சுருக்கப்பட்டுள்ளது.

(3) முதற் பதிப்பில் 'தமிழர்களின் எழுதுகோல்' எனும் பாடல் தலைப்பு, இரண்டாம் பதிப்பில் 'தமிழர் எழுதுகோல்' எனவும், பின்னர் வந்த பதிப்புகளில் 'தமிழர்களின் எழுதுகோல்' எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

(4) 'முதற் பதிப்பில், 'தேன் கவிகள்' எனும் பாடல் தலைப்பு, பிற பதிப்புகளில், 'தேன் கவிகள் தேவை' என நீட்சி பெற்றுள்ளது.

(5) முதற் பதிப்பில் 'மகாகவி பாரதியார்' எனும் பாடல் தலைப்பு பிற பதிப்புகளில் 'மகாகவி' எனத் திருத்தப்பட்டுள்ளது.

(6) முதற் பதிப்பில் 'அவன் சொல்லும் செயலும்' எனும் பாடல் தலைப்பு பிற பதிப்புகளில் 'சொல்லும் செயலும்' எனச் சுருக்கப்பட்டுள்ளது.

(7) முதற் பதிப்பில், 'மனிதர்கள் விரதபலன்' எனும் பாடல் தலைப்பு, இரண்டாம் பதிப்பில் 'மாதர் விரதபலன்' எனவும், மூன்றும் பதிப்பில் 'நம் மாதர்' எனவும் சுருக்கப்பட்டுள்ளது.

(8) முதற் பதிப்பில் 'அந்தச் சுதந்திரம் எந்த நாளும் உண்டு' எனும் பாடல் தலைப்பு, பிற பகுதிகளில் 'எந்த நாளும் உண்டு' எனச் சுருக்கப்பட்டுள்ளது.

(9) முதற் பதிப்பில் 'பெண் குரங்குக் கல்யாணம்' எனும் பாடல் தலைப்பு பிற பதிப்புகளில் 'பெண் குரங்குத் திருமணம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

(10) முதற் பதிப்பில் 'நாடகம் சினிமா நிலை' எனும் பாடல் தலைப்பு இரண்டாம் பதிப்பில் 'நாடகம் சினிமா' எனச் சுருக்கப் பட்டும், பிற பதிப்புகளில் முதற் பதிப்பின் பாடல் தலைப்பைப் போற்றிக் கையாளப்பட்டுள்ளதும் இங்கு நினைக்கத்தக்கது.

(தொடரும்)


## "தென்மொழி" சென்னை 5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 30 உருபா | 30 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 15 ,, | 15 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# உடல்நலம் - மருத்துவம்!

## சில பயனுள்ள குறிப்புகள்!

o அந்திமந்தாரை இலைகளிலாவது உன்மத்தன் இலைகளிலாவது விளக்கெண்ணெய் தடவி நெருப்பில் சூடு காட்டி வதக்கிக் கட்டிகளின் மேல் போட, கட்டிகள் பழுத்து உடையும்.

o கட்டிகள் உடைந்து புண் மிகுதியாக இருந்தால், முருங்கைத் தழையை இலேசாக வாட்டிக் கசக்கிப் பிழிந்து சாற்றை நீக்கி விட்டுப் பிழிந்தெடுத்த தழையை மீண்டும் வாணலியிலிட்டு, விளக்கெண்ணெய் விட்டு இலேசாக வதக்கி, அப்படியே புண் மேலிட்டுக் கட்டி வர புண் இரண்டு மூன்று நாட்களில் ஆறி விடும். சீழ் பிடிக்காது.

o அக்கி வந்தால் உன்மத்தன் இலைகளை அரைத்து எருமை வெண்ணெயிற் குழைத்துப் பூசி வர அக்கிப் புண்கள் விரைந்து ஆறும்.

o தீப்பட்ட புண்ணுக்கு எருக்கம் பூவும் சுண்ணும்பும் சம எடை எடுத்து அரைத்துப் பூசிவர புண் குணமாகும்.

o சிறுநீர் கழிக்கையில் கடுப்பு இருந்தால் எலுமிச்சம் பழச் சாற்றில் அதே அளவு நல்லெண்ணெய் கலந்து சாப்பிட உடனே நீங்கும்.

o இரவு வேளைகளில் புளி சேர்த்த உணவு ஒளிநீரை (விந்துவை) விரைந்து வெளிப்படுத்தும். எலுமிச்சஞ்சாறு அதனை இன்னும் விரைவில் வெளிப்படுத்தும் ஆகையால், எலுமிச்சஞ்சாற்றையோ சோற்றையோ இரவில் உண்ணக் கூடாது.

o மிளகாயில் தாமிரச்சாரம் உள்ளது. தாமிரச்சாரம் உடலை வலுப்படுத்தும். ஆந்திரர்கள் காரம் மிகுதியாய் உண்பதால் அவர்கள் உடல் மிகவும் வலிமை பெற்று விளங்குகிறது.

o மலம் வெளியேறுகையில் அரத்தம் கொட்டினுல், வாழைப் பூவை உரலிலிட்டுத் துவைத்துக் காற்படி (நிலைமைக்குத் தகுந்தபடி குறைத்துக் கொள்ளலாம்) சாறு பிழிந்து நல்ல சீரகம் பாக்களவு அரைத்துப் போட்டுக் குடிக்க அரத்தக் கடுப்பு உடனே நிற்கும்.

o கடுமையான மூல நோய் உள்ளவர்கள் பூனைக்கறியை அதிக காரமில்லாமல் சமைத்து இரண்டு மூன்று வேளை சாப்பிட்டால் நோய் முற்றிலும் நீங்கிக் குணமடைவார்கள்.

o மூல முளை இருந்தால் வேப்பங்கொட்டைகளை அரைத்து எடுத்த சாந்தை முளை மேல் மொத்தையாக வைத்து மூன்று இரவு கட்டிக் காலையில் வெந்நீரில் கழுவி வர, முளையிலுள்ள புழுக்கள் விழும்; முளை கரையும்.

**உணவு முறைகளாலேயே நோய்களைத் தடுக்கவும்**

# ஏன் சலிப்பு ஏற்படுகின்றது?

—பேரா. அ. பசுபதி, க. மு.

இன்றைய இளைஞர் உலகில் பெரும் பங்கு இடம் பெற்று அவர்களை உருப்பட விடாமல் அவர்களில் பலரை உயர விடாமல் தடுத்து வரும் உளநோய் 'சலிப்பு' (Boredom) என்பதாகும். எந்த ஓர் இளைஞனைப் பார்த்தாலும் இளைஞரை உசாவினாலும் இச் சலிப்புணர்ச்சி அவர்களை அவர்கள்தம் நல்வாழ்விலிருந்தே விரட்டி வருகிறது என்பதை உணரலாம். சலிப்பு எனும் இக்கொடிய மனச் சிக்கலிலிருந்து விடுபட்டுள்ளவர்கள் இன்று மிகச் சிலரே ஆவர். அவர்கள் எவ்வாறு இந்தச் சலிப்பிலிருந்து விடுபட்டுள்ளனர் என்று கூர்ந்தறிவது ஓர் உளவியலாய்வாளனின் (Psychologist) கடமையும் ஆகும்.

எப்பொழுதும் ஒரு சிலர் "பொழுதே போவதில்லை" என்று சொல்லுவதைக் கேட்டுள்ளோம். பொழுதைப் போக்குவதற்கு அவர்கள் பல திரைப்படங்களுக்கும் களியாட்டங்களுக்கும் செல்வதை அறிவோம். போக்குவதா பொழுது? அப்படிப்பட்ட எளிய நிலையிலா பொழுது உள்ளது? "பொழுது பொன் போன்றது" என்பர் அறிஞர். எத்தனையோ அறிஞர்களும் ஆய்வாளரும் "பொழுது போதவில்லையே" என்றேங்கும்போது இவர்கள் தமக்குப் "பொழுது போகவில்லையே" என்று நொந்து கொள்வதை நோக்கும் பொழுதுதான், இத்தகைய இளைஞரால் இனம் மொழி நாடு எனும் மூன்றும் ஏன் பெருமையுறவில்லை என்பதை உணர முடிகின்றது.

உளவியலடிப்படையில் நோக்கும்பொழுதுதான், இச் சிக்கலின் உண்மை இயல்பு நமக்கு விளங்குகின்றது. சலிப்பு (Boredom) அளவுக்கு மீறும்படி விடப்பட்டால், அது சோர்வு (Depression) எனும் மனச் சிக்கலுக்கும் செயல்குலைவு (Frustration) என்னும் வினைச் சிக்கலுக்கும் வழி வகுத்து விடுகின்றது. மயக்க மருந்துகளை (Narcotic Drugs) உட்கொள்வோர் பலர் சலிப்புக்கு மிகுந்த முகாமை கொடுத்தவர்கள்தாம். 'மனவாற்றல் குறைவானவர்கள்' (Mental Defectives) என உளவியலாளரால் குறிக்கப் பெறுபவர்களும் இவர்களே யாவர்.

பொழுதின் இயல்பே 'போவது'தான்; அதைப் 'போக்க' நினைப்பது பெருந்தவறாகும். இன்னும் சரியாகப் பழுக்காத கட்டியினை வன்மையாகப் பிதுக்கினால் சீழை விட மிகுதியாக அரத்தமே வரும்; புண் ஏற்பட்டு அதுவும் விரைவில் ஆறாது. அது போன்றதே, பொழுதைப் 'போக்க' நினைப்பதும்; போக்குவதும். செயற்கையாகப் பொழுதைப் போக்க எண்ணும் பொழுதுதான் இழிந்த உணர்ச்சிகளை ஊட்டவல்ல கதைகளும் பொத்தகங்களும் திரைப்படங்களும்

ஓர் இளைஞன் வாழ்வில் தம் ஊடுருவலை நிகழ்த்தி விடுகின்றன. பலர் கவறுடுவதில் (சூதாடுவது, சீட்டாட்டம் முதலியவற்றில்) இன்பம் காணத் தொடங்குவதும் இப்படித்தான்.

தரங்குறைந்த எழுத்துக்களும் இதழ்களும் குமுகாயத்தில் நிலவ முடிவதற்குக் கரணியமே, 'சலிப்பு' நோயால் விரட்டப் பெற்றுப் பொழுதைப் 'போக்க'த் துணியும் இளையோர் நல்கும் ஆதரவுதான். இதைத்தான் 'கனிச்சாறு' முதல் தொகுதி முப்பத்தொன்பதாம் பாடலில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** கடிந்துரைப்பார்.

"தரங்குறைந்த எழுத்தெழுதிப்
பணந்திரட்டும் நோக்கத்தால்
தாள்தொடங்கு கின்றார், இங்கே!
உரங்குலைந்த உள்ளத்தார்—
நரம்பிளைத்த உடலத்தார்—
வெற்றுணர்வால் ஓடோ டிப்போய்,
குரங்கினம்போல் தாவியதை
வாங்கி, அறைத் தாழடைத்துத்
தனிப்படித்து விடாய் தணிப்பார்!
இரங்குகின்றோம்! ஓ! ஓ! ஓ!
இளைஞர்களே! இளைஞைகளே!
வாழ்வென்ப திதுவே தானோ?"

இவ்வாறு இடித்துரைக்கும் பாவலரேறு, இந்நோய்க்கு மருந்தையும் பின் குறிப்பிட்டுள்ளார். அதனை இக்கட்டுரையின் இறுதியிற் காண்போம்.

நரம்பியல் நோயாகிய 'நரம்புச் சோர்வு'க்கும் (Nervous Debility) கரணியம், 'சலிப்பி'னால் உந்தப் பெற்றுப் பொழுதைப் 'போக்கும்' இளைஞர்தம் செயலே ஆகும்.

மேலைநாட்டு உளவியல் ஆய்வாளர் வில்லியம் எசு. காசல் பெர்ரி (Dr. William S. Casselberry) என்பார், 'வெற்றிமிகு வாழ்க்கைக்கான பொன்போலும் மறைபொருள்' (The Golden Secret of su cessful living) என்னும் தன் ஆய்வு நூலில், பொழுதைப் பொன் போலப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுவார். "ஒருவன் தன் ஒய்வு நேரத்தை எவ்வாறு திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்கிறானோ அந்த அளவுதான் தன் வாழ்வின் வெற்றியையும் பெறுகின்றான்" என்று அவர் கூறுகின்றார். பலர் வாழ்க்கைச் செய்திகள் பற்றியும் ஆராய்ந்து, "வாழ்வில் மிகவும் வெற்றி பெற்றவர்கள், தம் அலுவல் நேரத்தைக் காட்டிலும் ஒய்வுப் பொழுதுகளை நன்கு பயன்படுத்திக் கொண்டோரே ஆவர்" என்ற முடிபையும் அவர் உரைக்கின்றார்.

டேல் கார்னகி (Dale Carnegie) எனும் அறிவு நூல் வல்லாளர், "ஓய்வு நேரம் என்பதுதான் ஒவ்வொரு நாளும் ஒருவனுக்கு மிகுந்த ஏதம் விளைவிக்கக்கூடிய காலப் பகுதி ஆகும். ஒன்றுஞ் செய்யாமல் வாளா கிடக்கும் அந்நேரத்தில்தான் கவலைகள் எனும் நீலப்பேய்கள் மாந்தனைத் தாக்கத் தொடங்குகின்றன" என்பார்.

பெர்னார்டு சா (Bernard Shaw) இது பற்றிக் கூறுகையில், "நீ மகிழ்வாக இருக்கிறாயா இல்லையா என்று அக்கறை எடுத்துக் கொண்டு ஆய்வு நடத்திக் கொள்ளும் அளவு உனக்கு ஓய்வு கிட்டுமானால், வாழ்வில் வருந்திக் கொண்டிருப்பவனாகவே விளங்க உனக்கு வழி கிடைத்து விட்டதென்று பொருள்" என்று பகடி செய்வதுபோல் குறிப்பிடுவார்.

சலிப்பை வாழ்விலிருந்து விரட்ட மூன்று வழிகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.

1) தன்னைப் பிறரோடு ஒப்பீடு (Comparison) செய்த வண்ணம் எண்ணுதலைத் தவிர்த்துவிட வேண்டும்.

2) உயர்ந்த குறிக்கோள் ஒன்றைக் கொண்டு அதன் வழி நடக்க வேண்டும்.

3) பயனற்றவற்றைப் பேசுவோரிடமிருந்தும் தன்னலம் மிகுந்தவர்களிடமிருந்தும் விலகியே இருக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்களுள் (அமெரிக்கா இந்தியா முதலிய நாடுகளில் வாழ்வோர்) மூன்றில் இரு பங்கினர் உயர்ந்த குறிக்கோள் மட்டுமன்று, கொள்கையே அற்றவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இழிகாமப் போலிச் 'சாமியார்'களிடம் இளைஞர்—இளைஞையர் திரண்டிருப்பதன் கரணியம் இதுவே. சோவியத்து ஒன்றியமும் சீனமும் தம்நாட்டு இளைஞர் கூட்டத்தின்மேல் மிகுந்த கவனமும் அக்கறையும் செலுத்துகின்றன. எல்லா வகைகளிலும் வலிமை பெற்ற இளந் தலைமுறையினரால்தான் மொழியினம் நாடு வளர்ந்தோங்க இயலும். குறிக்கோள் ஏதுமற்ற கூனல் முதுகினரால் அவர்கள் வாழும் நிலத்திற்கும் கூடப் பயன் ஏதுமில்லை. வெட்டிப் பேச்சு வாயடிகள் வளர்க்கும் இளைஞர் மிகுதியாக வாழும் நாடு வீழும் நிலை அடையப்போகிறது என்பது பொருள்

இதனால்தான் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், இளைஞரை இழிவுறுத்தும் இந்நோய்க்கு மருந்தாகத் தமிழ்ப் பற்றெனும், உயரிய குறிக்கோளை முன் வைக்கிறார்.

"வயமிழக்கச் செய்கின்ற
இந்நோய்க்கு வாய்த்தநறு
மருந்தேசெந் தமிழ்மருந்தாம்!"

என்பதே ‘சலிப்பு’ மிகுந்த இளையோர்க்கு அவர் பரிந்துரைக்கும் நன் மருந்தாகும்.

இளையோர் அடையும் பாலியல் சிக்கல்கள் பற்றியும் அவற்றின் தீர்வு பற்றியும் முதன் முதலில் விரிவாக எண்ணியவர் ஏவ்லக் எல்லிசு (Havelock Ellis) ஆவார். பதின் மூன்று தலைப்புக்களில் அவர் மேற்கொண்ட ஆய்வு முயற்சியின் வெளிப்பாடே அவர்தம்—‘பாலுணர்வு பற்றிய உளவியல்’ (Psychology of sex) எனும் நூலாகும். பெருஞ்சித்திரனார் இனிய எளிய தமிழில் இளைஞர் பொருட்டெழுதிய ‘இளமை உணர்வுகள்’ என்னும் நூலே தமிழில் இதுபற்றி எழுந்துள்ள நூலாகும் பர். வ. சுப. மாணிக்கம் அவர்களின் ஆய்வான ‘தமிழ்க் காதலி’ன் சில பகுதிகள் இச்சிக்கல் பற்றி ஓரளவு கூறியுள்ளன.

---

# விளங்கிக் கொள்க!

**—பாவண்ணன்.**

**நாட்டுக்குப் பணிசெய்யும் நல்லெண்ணம்**
**இல்லாது நடக்கும் தேர்தல்**
**கூட்டுக்குப் படைசேர்க்கக் குழுக்குழுவாய்**
**அலைகின்ற கட்சிக் கூட்டம்**
**வீட்டுக்கு வந்தோலை வேண்டுங்கால்**
**எந்தமிழீர், விளங்கிக் கொள்க**
**ஆட்டுக்கு மலர்மாலை அணிவித்தல்**
**அதன் கழுத்தை அறுத்தற் கென்றே!**

**கூழுக்கும் ஆடைக்கும் கூரைக்கும்**
**இல்லாமல் குறையுள் ளோரை**
**வாழ்விக்கும் முயற்சிகளை வாய்ப்பேச்சுப்**
**பந்தலுடன் வைத்து விட்டோர்**
**ஏழைக்குச் செய்திமென இனித்தோலை**
**கேட்பதெலாம் தமிழ ரீரே,**
**வாழ்வுக்கு நாற்காலி வாகாகப்**
**பெறற்கென்று வகுத்த பொய்யே!**

**படிப்புக்குப் பலரேங்கப் படித்தோரும்**
**பணிதேடி ஏங்க, உள்ள**
**வெடிப்புக்கு மருந்தின்றி வெற்றாளாய்**
**நிற்போர்முன் விரல்கள் கூப்பி**
**முடிப்புக்குச் சிக்கலினைக் கொணர்வமென**
**முழக்கமிட்டு முன்பல் காட்டி**
**நடிப்புக்கு நல்லார்போல் நயந்தோலை**
**கேட்பதெலாம் நடைக்கூத் தாமே!**

# உலகத் தமிழ், தமிழர் பற்றிய செய்திகள்

o தமிழ் ஈழத்தின் தலைநகரான திருகோணமலை நகரசபையின் ஆளுமையைத் தனித்தமிழிலேயே நடத்துவதென்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆட்சி நடைபெறும் திருகோணமலை நகராட்சி தீர்மானித்திருக்கிறது.

o அமெரிக்காவிலுள்ள தமிழீழ நாட்டுப் பற்றுளர்களின் முயற்சியினால், ஈழத்து விடுதலைப் பாவலர் காசி ஆனந்தனுடைய 'உயிர் தமிழுக்கு' என்னும் சிறு நூலிலுள்ள பாடல்கள் சுதா வேங்கடராமனால் பாடப் பெற்று, அமெரிக்காவில் வெளிவந்துள்ளது. அவ்விசைத்தட்டை நாட்டியப் பேரொளி நடிகை பத்மினி வெளியிட்டார்.

o தமிழக வரலாற்றிலேயே, தமிழ்நாட்டைக் களப்பிரர் ஆண்ட காலமான கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தையே இருண்ட காலம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஏனெனில் இக்காலத்தில்தான் தமிழ்மொழிக்குப் பெரும் சீரழிவுகள் நேர்ந்தன. தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு எல்லாம் சிதைந்து போயின. தமிழ்நாட்டின் முன்னோர்களால் நிறுவப் பெற்று, இடையீடின்றி நடைபெற்று வந்த அறச் செயல்கள் யாவும் அழிக்கப்பட்டுப் போயின. பௌத்தம், சமணம், வைதீகம் ஆகிய பிற சமயங்களும், பிற மொழியில் எழுதப் பெற்ற நூல்களும் அரசினரின் பேராதரவு பெற்று விளங்கின. இக் களப்பிரர்களின் ஆட்சியினால், மதுரை மாநகரின் தமிழாராய்ச்சி செய்து கொண்டிருந்த கடைக் கழகமும் அழிந்து போயிற்று.

o ஆப்கானித்தான் நாட்டில் ஒரு நகருக்கு **'தமிழக்'** என்று பெயருள்ளது. அந்நகரில் உள்ள முகமதியர் தம் மொழியுடன் தமிழையும் கலந்து பேசுகிறார்கள்.

o ஆரிய மொழிக்குரிய நெடுங்கணக்குத் தமிழர் முறையைப் பார்த்துச் செய்யப்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. தாங்கள் செல்லுமிடங்கட்குத் தக்கபடி புதிய லிபிகள் ஏற்படுத்திக்கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ்நாட்டிற்கேற்றபடி தமிழ் லிபியை ஒட்டிக் 'கிரந்தம்' என்னும் பெயரில் புதியதோர் லிபியை வகுத்தனர். வி. கே. சூ. 'தமிழ்மொழி வரலாறு.'

o ஆரியர் முதலில் சமசுக்கிருத எழுத்தைத் தோற்றுவித்தபோது தமிழெழுத்துகளை விடத் தமது மொழிக்கு அதிக எழுத்துகளிருக்கின்றனவென்று உலகத்திற்குக் காட்ட வேண்டி

# அசாம் புகட்டும் அசைவிலா ஊக்கம்!

- 'பாரத்தேசி'ன் வடக்கிலென்றால், வாழ்வுரிமைக்குப் போராடலாம்! 'முழுவுரிமை'க்கு வழி வகுக்கலாம்! கோரிக்கை' விடுக்கலாம்! தன்னாட்சி கேட்கலாம்!
- பயனும் நம்பிக்கையும் இல்லையென்றால், தலைமறைவு இயக்கங்களாக ஒன்று சேர்ந்து விடுதலை அமைப்பும் அமைக்கலாம்! தில்லிக்கு எச்சரிக்கையும் விடுக்கலாம்!
- இதனாலெல்லாம் 'தேசிய நீரோட்டம்' பாதிக்கப்படாது! 'ஒருமைப்பாட்டி'ற்குக் குந்தகம் விளையாது! 'அமைதிக்குக் குலைவு ஏதும் வந்து விடாது!
- தில்லி அரசும் அவர்களுடன் கலந்துரை (பேச்சுவார்த்தை) நடத்தும்! ஒப்பந்தம் பேசும்! தூது அனுப்பி அமைவு காண அழைப்பு விடுக்கும்! இறுதியாக இன்றைய 'ஆரியாவர்த்த'த்தின் **சாணக்கியத் தலைவி இந்திராவே** அப் போராட்டக்காரர்களை நேரில் போய் அணுகி அழைத்துப் பேசிப் பார்க்கும் இறும்பூது (அதிசய) நிகழ்ச்சியும் நடக்கும்!
- இத்தனைக்குப் பின்னாலும் அவர்கள் 'ஒத்து வந்து' அடங்காது முனைந்து இயங்கிவரத் தலைப்பட்டாலும், அவர்கள் மேல் உடனடித் தீவிர நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது! அமைச்சர்களின் உசாவல் தொழில்தான் நடந்து வரும்!
- **ஆனால், தென்னாட்டில் – தமிழகத்தில்** என்றாலோ, 'தன்னாட்சி!' என்று—சற்றுக் கூடுதல் வேகத்துடன்—தாடையை அசைத்தாலோ, 'தமிழ்நாடு தமிழனுக்குத்தான்' என்று எங்கோ மூலையில் ஒற்றைத் தனிக் கூச்சல் எழுந்து விட்டாலோ, 'ஆ! அம்மவோ! ஐயகோ! போச்சு அமைதி! நின்றது நீரோட்டம்!'
- தப்பித் தவறி, திரவிடக் கும்பலில் ஒரிருவரினாலோ, தென்மொழி அணியினாலோ, 'விடுதலை' என்று—அண்டையில் உள்ளவனுக்குங் கூடக் கேட்காமல்-ஒரு கிசுகிசுப்பு கிளம்பியதோ, போனது! 'கெட்டது ('ஒரிந்திய'க்) குடி! அற்றது

(முன்பக்கத் தொடர்ச்சி)

ரு, ரூ, லு, அம், அஃக இப்படிப் பல போலியுயிரெழுத்துகளைப் பிறப்பித்ததன்றிக் க்சடதப என்னும் ஐந்தெழுத்துகளையும் மும்மூன்றெழுத்துகள் சேர்த்து ஒவ்வொன்றையும் நன்னான்காகச் செய்து, அவற்றின் ஓசைகளையும் விரித்து, வலித்தல், மெலித்தல், இடைப்படப் பலுக்கல் என்பவற்றைக் கற்பித்து வேறு பல எழுத்துகளையும் கூட்டி அதிகமாக்கிக் காட்டினர். இங்ஙனம் அதிகப்படுத்தியது எற்றுக்கெனின், தங்கள் மொழி ஏராளமான எழுத்துகளை யுடையதென்றும், மிகப் பெரியதென்றும் உலகத்திற்குணர்த்தவே.

—எம். ஈ. வீரபாகு. 'தமிழும் தமிழரும்'

பட்டம்! விழுந்தது ஒழுங்கு! கலந்ததே ஒருமைப்பாடு!' 'அடி பிடி! உள்ளே தள்ளு! நொறுக்கு! கும்மு! பேச்சுக்கும்—ஏன், மூச்சுக்குமே தடை கொண்டு வா! ஒடுக்கி வை!'—

o என ஊழிக் கூத்தே தலையெழுத்து போல், தாண்டவமாடித் தீர்க்கப்படும்!

o அட தமிழா! அட தமிழா! நீதான்...கால் தூசோ? தூம்போ? உன் மண்டையில் என்ன, புழுதித் துகளோ?? உன் நெஞ்சில் என்ன, ஈளைக் கட்டியோ??? அட, ஊருக்கு இளைத்தவனே....!!!

முன் குறிப்பு: பின் வரும் கட்டுரையானது, இந்தியத் தேசிய 'நீரோட்ட'த்தில் தம் 'நெஞ்ச'ப் படகினை விட்டுக் களிப்ப வரும், அண்மையில் கலைஞரை, "நான் பிராமண இனத்தவருக்குத் **தனிப்பட்ட முறையில் எதிரியே அல்ல(ன்)!** மாறாக, அவர் களை ஆதரித்துப்புரப்பவனே!" என்று ஆரியத்துக்கு நயப்புரை கூற வைக்க வெனச் 'சிறப்பு நேருரை கண்டுள்ளவரும் (13-4-80 சித்தி ரைச் சிறப்பிதழ்), ஆகிய திரு. மணியன் அவர்களின் 'இதயம் பேசு கிறது' 30-3-80 இதழில் 'Special Report' ஆக(!), 'அலைமோதும் அசாம் ' என்ற தலைப்பில் வெளிவந்தது. இங்கு, (கலப்பு நீக்கிய உண்மைத்) தமிழில் தரப் பெறுகின்றது.

அப்பட்டமான இன எழுச்சி விடுதலை உணர்வுகளையும் அவற்றையொட்டிய ஏதமிக்க உண்மை நிலைகளையும் அப்படியே வெட்ட வெளிச்சமாக--'இந்தியா டுடே', 'சண்டே' 'நியூ தில்லி' ஆகிய தாளிகைகளினின்று திரட்டி—மணியனார் முகாமை கொடுத்துத் தம் இதழில் வெளியிட்டுள்ளமை வியப்பாகத் தோன்றினும், அதில் வியப்பேதுமில்லை! 'காலம் நெருங்கி வருகின்றது! வெந் தணல் ஒன்று விரைந்து வளர்கின்றது எனப் பாவேந்தரின் கருங் குயில் குத்திக் குரலெடுத்துக் கடவுமுன், எச்சரிக்கை கொள்ளுங்கள்!' என – எப்போதுமே விழிப்புடனிருக்கும்—தம் ஆரிய இனத்திற்கு (மேலும்) வியட்பூட்டிவிடும் உத்தியே அது! இதை என்று நாம் முழுமையும் உணர்ந்து வினையுரங் கொண்டு விழித்தெழுகின்றோமோ, அன்றே நமக்கு விடிவும் உண்டாகும்!

—**தென்மொழி மறை. நித்தலின்பன்**,
வினையாளர் – 'சேரர் கொற்றம்'.

**கட்டுரை :**

"இந்தியர்களே, வெளியேறுங்கள்!" அலுவலக வாயிலில் இப்படி ஒரு குரல்.

'அசாமியத் தாய்மார்களை, அக்கை தங்கையரைக் கற்பழித்த இந்தியப் பட்டாளத்தை (இராணுவத்தை) விரட்டி அடியுங்கள்!'— சுவரில் எழுதப் பெற்ற ஒரு வாசகம்.

'ஒண்ட வந்தவர்கள் நம்மைச் சுரண்டுகின்றார்கள். அவர்களை வெளியேற்றுங்கள்!'—நாளிதழில் ஆசிரியவுரை.

தன்னுரிமை (சுதந்திர) நாளன்று, 'பாரத'க் கொடியையேற்றிக் கொண்டாடவில்லை. தெருமுனையில் 'அனைத்து அசாம் மாணவர் ஒன்றிய'த்தின் பச்சைக்கொடி உயர்த்தப்படுகின்றது. குடியரசு நாளன்று விழாக்களில் மக்கள் கலந்து கொள்ளவில்லை. கண்டனக் கூட்டங்கள் நடத்துகிறார்கள்.

"அசாம் அசாமியர்களுக்கே! வாழ விரும்பினால் அசாமியர் களுடன் கலந்து விடுங்கள்!" - இந்த முழக்கத்துடன் நித்தமும் ஊர்வலம் நடக்கிறது: மறியல்கள் நடைபெறுகின்றன. பள்ளிக் கூடங்கள் கல்லூரிகள் மூடப்பட்டு விட்டன. அலுவலகங்களும், மருத்துவமனைகளும் வேலை செய்யவில்லை. அசாமின் முகாமை வாய்ந்த எண்ணெய்—கன்னெய் (பெட்ரோல்) தூய்மை செய்து எடுக்கும் ஆலை அமைதியில் மூழ்கிக் கிடக்கிறது....

**அவர்கள் கவலைப்படவில்லை.** இஃது, அவர்களுக்கு உயிர் வாழ்க்கைக்காக பற்றிய சிக்கலாம்!

அந்தச் சிக்கல்தான் என்ன....?

இந்தியாவிலேயே வடகிழக்கில் ஒதுங்கி நிற்கும் மாநிலம் அசாம். புது தில்லியிலிருந்து அசாமின் தலைநகரான கௌஃகாத் திக்குப் போய்ச் சேர 1928 ஆயிரமாத்திரி (கி. மீ.) தொலைவு—46 மணி நேரம் ஆகிறது! வானூர்தி வழியாகப் போய்ச் சேருவ தற்கும் நேரடியான இணைப்பில்லை. 871 உருபா கட்டணமாகும்!

அசாமின் மக்கட்டொகை 189 இலக்கம். அதில், 100 இலக்கம் பேர்கள் அசாமியர்கள். மற்றவர்கள் எல்லாம் வங்காளிகள்—வெளி நாட்டவர்கள். **அந்த மாநிலத்தின் முகாமையான பதவி களில், வணிகம், கலை—அரசியல் ஆகிய துறைகளில் அவர்கள்தாம்** (அந்தப் பிறர்தாம்) **இருக்கிறார்கள். அசாமின் தலையெழுத்தையே அவர்கள் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.** பொதுவாக அது பேராயத்தையே (காங்கிரசையே) ஆதரிக்கும் மாநிலம். இன்று அது பொதுவுடை மைக்காரர்களின் பிடியில் இருக்கிறது. இந்த நிலைக்கு, வங்காளப் பொதுவுடைமையரின் ஊடுருவல்தான் கரணியம் என்று அசாமி யர்கள் கருதுகிறார்கள்!

இந்தியாவின் மக்கட்டொகைப் பெருக்க விழுக்காட்டைப் போல இருமடங்கு அசாமின் மக்கட்டொகை பெருகி வருகிறது. புதிது புதி தாக மக்கள்—ஏதிலிகள்—வந்து குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தை எடுத்துக் கொள்கிறார்கள். வீடுகளைக் கட்டிக் கொள் கிறார்கள். ஆனால், அசாமின் பொருளியலில் முன்னேற்றம் கிடைப்பதில்லை!

இந்தியாவின் 'டீசல்'—மண்ணெய்—கன்னெய் உண்டாக் கத்தில் அசாம் மூன்றாவது இடம் பெறுகிறது. 840 கோடி உருபா மதிப்புள்ள மண்ணெய்ப் பொருட்களை உருவாக்கிக் கொடுக்

கிறது. ஆனால், அசாமிற்குக் கிடைக்கும் மன்னுரிமைத் தொகை (Royalty)யோ, 22 கோடிதான்! சிறு தொழில்கள் ஏதும் வளர வில்லை. ஓர் இந்தியனின் சராசரி வருமானம் மாதத்துக்கு 70உருபா. இரண்டரை இலக்கம் பேர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக் கிறார்கள்.

சரியான சாலைகள் போடப் பெறவில்லை. புதிய ஆலைகள் தோன்றவில்லை. வேறு மொழி பேசுபவர்கள் உயர்ந்த நிலையில் ஏந்தாக இருக்கிறார்கள். அசாமிய மக்களுக்கு நல்வாழ்வு இல்லை. ஊழல்கள்—பரத்தமை—கறுப்புச் சந்தை பெருகி விட்டன.

இதற்கெல்லாம் கரணியம் இந்தியாவில் அசாம் தனக்குரிய இடத்தையோ மதிப்பையோ பெறாததுதான் என்று அசாமியர்கள் கருதுகிறார்கள். இந்தியாவிலேயே இருந்தும், தாங்கள் ஒதுக்கப் பட்டு விட்டதாகக் கருதுகிறார்கள். **அதனால், இந்தியாவிலிருந்து ஒதுங்க எண்ணுகிறார்கள்!** 'அசாமில் இருப்பவர்கள் எல்லாரும் இரண்டு அடையாளச்சீட்டு வைத்துக்கொள்ள வேண்டும். ஒன்று, இந்தியன் என்று காட்டுவதற்கு; இன்னொன்று, அசாமியன் என்று காட்டுவதற்கு!"—இதுதான் இன்று அந்த மக்களின் முழக்கம்.

அசாம், இந்தியாவுடன் இணைக்கப் பெற்றது—**இந்தியாவில் இயற்கையாக அமைந்த பகுதி அன்று.** இதுதான் வரலாறு. 1922-ஆம் ஆண்டு பருமிய அரசன் எண்டபூ என்பவனைப் பிரிட்டி சார் தோற்கடித்தபோது, அசாம் இந்தியாவுடன் இணைக்கப்பெற்றது. இந்தியாவுக்குத் தன்னுரிமை கிடைத்ததற்குமுன் சைமன் குழு வந்தது. "இந்தியாவிலேயே இருக்க விரும்புகிறீர்களா...?" என்று கேட்டனர் பிரிட்டிசார். "வெள்ளைத் துரைகள் வெளியேறுவதானால், கறுப்புத் துரைகளின் அடிமைகளாக் இருக்க விரும்பவில்லை!" என்று சொன்னார்கள் பெரும்பாலான மக்கள்.

**இன்று, அசாம் பிரிய விரும்புகிறது**—ஒதுங்க விரும்பு கிறது—இந்தியாவில் அவர்களுக்கு நயன்மை (நியாயம்) கிடைக்க வில்லையானால், இந்த எண்ணத்தின் விளைவுகள் ஊறு பயப்பனவாக இருக்கக் கூடும்; அசாம் நம் நாட்டின் வடகிழக்கில் உள்ள எல்லைப் புற மாநிலம். சீனா அதன் தலைவாயிலில் காத்துக் கொண்டு நிற் கிறது. புரட்சியாளர்களுக்குச் சீனா கருவிகள் தந்து, படைமுறைப் பயிற்சியையும் கமுக்கமாக அளித்து வருகிறது.

'இஃது எங்கள் பதினெட்டாவது விடுதலைப் போர்!" என் கிறார்கள் அசாமியர்கள். மொகலாயர்கள் பதினேழு தடவைகள் அசாம் பகுதியின் மீது படையெடுக்க முயன்று தோற்றுப் போனார் களாம். அசாமின் படைத் தலைவனாக அப்போது இருந்து புகழ் பெற்ற வீரனின் பெயர் போர்ப்புசான். இன்று அந்தப் பெயரைச் சொன்னால் அசாமிய இளைஞர்களின் கண்களில் புத்தொளி பளிச் சிடுகிறது!

அவர்கள் கேட்கும் தீர்வுதான் என்ன....?

'பகீராகத்'—இதுதான் அசாமியரல்லாத வெளி மாநில—வெளி நாட்டு மக்களுக்கு அவர்கள் கொடுக்கும் பெயர். வெளிநாட்டவர் இங்கே இருப்பதற்கு ஒரு சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். இதுகூட இல்லாதார் பலர் இன்று அசாமில் அரசு வேலைகளில் கூட இருக்கிறார்கள். அசாம் மக்களில் நாலில் ஒரு பங்கினர் இப்படி வெளிநாட்டவர்களே இருக்கிறார்கள்.

இந்தியாவும் பாக்கித்தானும் பிரிந்த போது, இந்துக்கள்—முகாமையாக வங்காளிகள் இங்குக் குடிபுகுந்து விட்டார்கள். கிழக்குப் பாக்கித்தானிலிருந்து முசுலிம்களும் பெருவாரியாக இங்கே ஏந்துகளை நாடிக் குடியேறி விட்டார்கள். அப்புறம், பிரிவினையின் போது ஏதிலிகள் உள்ளே வரத் தொடங்கினார்கள். இவர்களில் பெரும்பாலோர் இந்தியாவில் குடியேறிச் சான்றிதழ் வாங்கவில்லை இவாகள் எல்லாருமே பெருவாரியாகப் பேராயக் கட்சிக்கு ஒப்போலை யிட்டார்கள். அதனால், பேராய அரசு அவர்களை வெளியேற்ற முயலவும் இல்லை!

1971-ஆம் ஆண்டு பங்களா தேசம் பிறந்தது. அதற்கு முன்னும் பின்னும் அங்கிருந்து இந்துக்கள் இங்கே ஓடி வந்து விட்டார்கள். ஓரளவு இவர்களுக்குப் புகலிடம் தந்து ஆதரிக்க இந்தியாவும் ஒப்புக்கொண்டு விட்டது. பங்களா தேசத்துடன் ஒப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது.

இப்படி வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் எல்லாரையும் 1951-ஆம் ஆண்டை எல்லைக் கோடாக வைத்துக்கொண்டு வெளி யேற்றி, மற்ற மாநிலங்களில் பிரித்துக் குடியேற்ற வேண்டும் என்பது அசாம் மக்களின் கோரிக்கை. 1971-ஆம் ஆண்டைஎல்லைக் கோடாக வைத்துக்கொண்டு அதற்குப் பிறகு வந்தவர்களை வெளி யேற்றலாம் என்று சொல்லுகிறது இந்திய அரசு.

o 'மற்ற மாநிலங்களின் மக்களும் அசாமிலிருந்து வெளியேற வேண்டும்' என்கின்றன அசாமியர்களின் அரசியல் கட்சிகள். ('இந்திய நாய்களே வெளியேறுங்கள்!'' என்பது அசாமியர்களின் தலைமை முழக்கம்.) **'அரசியல் சட்டம் அதற்கு இடந்தராது. என்று சொன்னால், ''அரசியல் சட்டத்தை மாற்றுங்கள்!''** என்று குரல் கொடுக்கிறார்கள்.

சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் இன்று வரை உடன்பாடு ஏற் படவில்லை. புரட்சியும் மறியல்களும் தொடருகின்றன....(இந்த நிலையே 'தென்மொழி' அச்சேறும் வரை இருந்தும் வருகின்றது.)

o 'அசாம் மாணவர் ஒன்றிய'த்தின் தலைவர் பிரபுல்லா மகன்தோ தலைமையரை (பிரதமரை)ச் சந்திக்கத் தில்லிக்கு அழைக் கப்பெற்றார். தம் நண்பர்களுடன் தலைமையரிடம் வந்து பேசிய அவர், **மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொண்டு**

# ஆந்திர மன்னர் வெளியிட்ட வெள்ளிக் காசுகளில் தமிழ்

—பேரா. இரா. மதிவாணன், க. மு.

ஆந்திர மன்னர் மரபினருள் நூற்றுவர் கன்னர் (சாதவாகனர்). தி. மு. மூன்றும் நூற்றுண்டு முதல் தி. பி. இரண்டாம் நூற்றுண்டு வரை ஆந்திரப் பேரரசைக் கட்டியாண்டனர். அக்காலத்தில் பிராகிருத மொழி அவர்களுடைய ஆட்சி மொழியாக இருந்தாலும் தமிழ் அவர்களால் பெரிதும் போற்றி மதிக்கப்பட்டது என்பது அவர்கள் வெளியிட்ட காசுகளினின்றும் தெளிவாகிறது.

தமிழகத் தொல்லியல்துறை இயக்குநர் திரு. நாகசாமி அவர்கள் 1968-ஆம் ஆண்டு வெளியிட்ட கல்வெட்டுக் கருத்தரங்கு மலரில் 'சாதவாகனரின் இருமொழி நாணயம்' (A Bilingual Coin of a Satavahana - P. 200) என்னும் கட்டுரையில் இச்செய்தியை உறுதிப்படுத்தியுள்ளார்.

தி. பி. இரண்டாம் நூற்றுண்டளவில் வாழ்ந்த அரசன் வசிட்டி மகன் திருசதகண்ணியின் உருவம் பொறித்த இரு வெள்ளிக் காசுகள் தொல்லியல் துறையினரின் ஆய்வுக்குள்ளாயின. இத்தகைய காசுகள் கோதாவரி ஆறு முதல் தமிழ்நாட்டுக் கடலூர் வரையுள்ள பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன.

இக்காசுகளை ஆராய்ந்த பண்டாரகர் அல்தேகர் என்பவர், காசின் முன்பக்கத்தில் அரசன் உருவத்தைச் சுற்றிலும் பிராகிருத மொழியில் 'ரான்ஜோ வசிஸ்டி புத்தச சிரீ சதகனிச' என்று பிராமி எழுத்தில் எழுதப்பட்டிருப்பதை வெளிப்படுத்தினர். ஆயின், இக்காசின் மறு பக்கத்தில் தாமிழி (பழந்தமிழ்) எழுத்தில் 'அரசன் வசிட்டி மகன் திரு சதக(ண்)ணி' என்று தமிழில் எழுதப்பட்டிருப்பதை திரு. நாகசாமி வெளியுலகிற்குப் புலப்படுத்திக் காட்டியிருக்கிறார். இத்தகு வரலாற்றுண்மையை நடுநின்று வெளிப்படுத்திய தொல்லியல் துறை இயக்குநர் திரு. நாகசாமிக்குத் தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

---

(முன்பக்கத் தொடர்ச்சி) ·

**அசாமிய மொழியில்தான் பேசினாராம்!** காந்தி புதை—மேடைக்குப் போய் மலர் வளையம் வைக்க மறுத்து விட்டாராம்!

o செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது அவர் அளித்த விடை; **"கடமை காத்திருக்கிறது. இங்கே நாங்கள் இன்பப் பொழுது போக்கிற்காக வரவில்லை!"**

**பின் குறிப்பு:** கட்டுரையுள், தடிப்பெழுத்துகளும், சிற்சில விடங்களில் மேற்கோட் குறிப்புகளும், முகாமைக் குறிகளும், ஈரிடங்களில் அடைப்புக் குறிகளினுள் செய்திகளும் எம்மால் தரப் பெற்றுள்ளன. 0

சாதவாகன மன்னர்கள் தெலுங்கில் வெளியிட்ட காசுகளோ கல்வெட்டுகளோ நூல்களோ அல்லது அவற்றைப் பற்றிய குறிப்போ யாண்டும் இதுகாறும் கிடைக்கப் பெறவில்லை. தெலுங்கு மொழி பேச்சளவில் அக்காலத்து உருவாகியிருப்பினும் அப்பொழுதே அதற்கு அப்பெருமன்னர் எழுத்து வடிவம் தராமல் இருந்திரார். தெலுங்கு, தி. பி. இரண்டாம் நூற்றுண்டு வரை தனி மொழியாக உருவாகவில்லை யென்பதும், இந்நாவலந்தேயத்தில் வடபால் பிராகிருதமும் தென்பால் தமிழும் ஆக இரு மொழிகளே அரசோச்சின என்பதும் உறுதிப்படுகிறது.

இக்காசின் மறுபுறத்திலுள்ள தமிழ் எழுத்துகளில், தமிழுக்கே உரிய மெய் புள்ளி பெறும் இயல்பு காணப்படுகிறது.

## ஆந்திர சாதவாகன மன்னரின் இருமொழிக் காசுகள்

**1) வெள்ளிக் காசின் முன் பக்கம்**

அரசன் பெயர் பிராகிருதமொழியில் பிராமி எழுத்தில் எழுதப் பட்டுள்ளது.





(நன்றி. படம்—கல்வெட்டு கருத்தரங்கு மலர்—1968)

**2) வெள்ளிக்காசின் மறு பக்கம்**

**'அரசன் வசிட்டிமகன் திரு சதகணி'** என்னுந் தொடர் தமிழி எழுத்தில் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளது.

'வசிட்டிமகன்' என்னும் சொற்களில் மேற்புள்ளி காணப்படு கிறது என்றும், தென்பாண்டி நாட்டுக் குகைக் கல்வெட்டில் உள்ள

அதே தமிழி எழுத்துகள் இக்காசுகளில் காணப்படுகின்றன என்றும் திரு. நாகசாமி கூறுகிறார்.

அரசனின் முக உருவம் பொறித்த இருமொழிக் (பிராகிருதம், கிரேக்கம்) காசுகளை வடமேற்கு இந்தியாவில் சத்திரபர் என்னும் மன்னர் வெளியிட்டனர். அதைப் போன்று, தானும் தன் முக உருவம் பொறித்த இருமொழிக் (தமிழ், பிராகிருதம்) காசுகளை வசிட்டிமகன் சதகணி வெளியிட்டிருக்கிறான். இவன் மகன் யஃஞ சதகண்ணியும் தன் தந்தையைப் போன்றே தமிழ் பிராகிருத இரு மொழிக் காசுகளை வெளியிட்டிருக்கிறான்.

ஆந்திரப் பேரரசில் பிராகிருதம் பேசுவோர் விந்தியப்பகுதியை யொட்டியும் தமிழ் பேசுவோர் விந்தியப் பகுதியின் தென்பாலும் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதலாம். கன்னட மராத்திய ஆந்திரப் பகுதிகளிலுள்ள ஊர்ப்பெயர்களும், நாட்டுப்புற மக்களின் இயற்பெயர்களும் விழாக்கள், நாட்டுப் பாடல்கள் ஆகியனவும் முற்றிலும் தமிழ்ச் சாயல் மிக்கனவாயிருப்பதை இன்றும் காண முடிகிறது.

புலவரைப் புரந்த வள்ளலின் பெயரால் அழைக்கப்பட்ட நூலுக்குச் சான்று காட்ட வந்த நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் 'சாதவாகனம்' என்னும் தமிழ் நூலின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சாதவாகன மன்னர்களின் அவைக்களத்தில் தமிழ்ப் புலவர்கள் இருந்தார்கள் என்பதற்கும், தமிழ்ப் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் தந்து சாதவாகன மன்னர் தமிழையும் புரந்தனர் என்பதற்கும் இது தக்க சான்றாகும். தெலுங்கு தனி மொழியாக உருவெடுத்த பத்தாம் நூற்றாண்டுக்குப் பிற்காலத்திலும், கம்பரைப் பிரதாபருத்திரன் வரவேற்றுப் புரந்ததைக் காண்கிறோம்.

தி. பி. முதல் நூற்றாண்டு முதல் தி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை பவுத்த சமண சமயங்கள் மக்களால் மதிக்கப்பட்ட சமயங்களாகத் திகழ்ந்தன. பவுத்தரின் பாலிமொழித் தாக்குதல் கோதாவரி கிருட்டிண ஆற்றுப் படுகை ஆந்திர நாட்டுப் பகுதி தமிழ் தெலுங்காக மாறத் தொடங்கியது. அதன் பிறகு வந்த வடமொழித் தாக்கம் அதனை முற்றிலும் தனி மொழியாக்கி விட்டது. சமணரின் பிராகிருதமொழித் தாக்கம் கன்னடத்தைத் தனி மொழியாக்கி விட்டது. ஏனைத் திரவிட மொழிகள் உருப் பெறாத கடைக்கழக காலத்தில் விந்தியம் வரை தமிழ் பேசப்பட்டது என்பதற்குச் சான்றாகக் கிடைத்துள்ள இக்காசுகள் தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படுவனவாகும்.

தொல்லியல் ஆய்வாளர்களின் கவனம் பூம்புகார் கொற்கை கடலுள்மூழ்கிய குமரி ஆகிய பகுதிகளுக்குத் திரும்பினால் மேலும் பல உண்மைகள் புலப்படும். o

சிந்தித்து இனிமேலும் தமிழ்மணம் பரப்ப முன்வர வேண்டும்' "ஆல் இந்திய ரேடியோ" என்ற சொல்லை மாற்ற தமிழ் நெஞ்சங்கள் முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

—**ஆறுமுக பழனி**, திருமழிசை

*0:773:* பேரன்புகெழுமிய ஆசிரியர்க்கு, வணக்கம். நலம். நலமே நாடுகின்றேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அஞ்சல் வழிக் கல்வி தொடங்கியமை பாராட்டற் பாலதொன்றே. ஆயின் அத்துறைவழி ஆசிரியப் பட்டம் (B. Ed.) பயிற்சிக்குரிய பாடப் பகுதிகளில் இந்தி மொழியைத் தேசிய மொழியென ஏற்றும், ஏந்தியும், ஏத்தியும் பாடப் பகுதிகள் வெளிவருகின்றன. 1948 இராதா கிருட்டிணன் கல்விக் குழு அறிக்கையில் தேவநாகரி எழுத்துகளைப் பயன்படுத்துவதற்கு அக்குழு பரிந்துரைத்துள்ளது. தேசிய மொழியாக இந்தி ஆவதற்குரிய வாய்ப்பிருப்பதால் அதன் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் முயற்சி செய்தல் வேண்டும்.' என்பன போலும் கருத்துகள் உள. இந்தியக் கல்விக்குழு II *(1964-66)* அறிக்கையில் முதலிலேயே *(1)* "தாய்மொழிக்கு அடுத்தபடியாகவே நாட்டின் ஆட்சி மொழியான இந்தி முக்கியத்துவதைப் பெறுகின்றது" என்றும் *(4)* மும்மொழியைப் படிப்பதற்குரியப் பருவம் கீழ் உயர் நிலைப்பள்ளிப் பருவமாகும் (Lower Secondary) இந்நிலையில் இம் மொழிகளைக் கற்பிக்கக் குறைந்த ஆசிரியர்கள் தேவைப்படுவர் என்றும் (7) எந்த நிலையிலும் எந்த மொழியும் கட்டாயமாகப் புகுத்தப்படலாகாது என்றும் (13) இணைப்பு மொழியாகப் பெரும்பாலான இந்திய மக்களுக்கு ஆங்கிலம் பயன்படாது. இந்திதான் பயன்படும். எனவே, இந்தி பேசாதார் வாழும் பகுதிகளில் இந்தியைப் பரப்புவதற்குத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என இக் குழு வலியுறுத்துகிறது என்றும் குழப்பத்தோடு இந்தித் திணிப்பை வலியுறுத்துகிறது. தத்துவ இயல்—சமூக இயல் பாட எண் 5முதல் 8 வரை' என்னும் பகுதியில் 'ஒருமைப்பாட்டின் தேவை' என்னும் பகுதியும் தமிழறிஞர் கண்டித்தற்குரியன. தங்கள் கருத்துக்கிவை உரிய, நன்றி.

—**புலவர்க்கினியன்**, திருக்கழுக்குன்றம்.

*0:774:* பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். 'தினமணி' ஆரிரியர் தம் ஆரிய வேலையை முன்பு இருந்ததைவிட முடுக்கமாகச் செய்யத் தொடங்கி விட்டார்; தினமணியில் இந்திப் பாடம் கற்பிக்கப் போகின்றாராம். நிலைமை எப்படி இருக்கிறது? ஊர் இரண்டு பட்டு விட்டது. ஆரியன் நினைத்ததெல்லாம் நடக்கிறது; உணர்வற்ற தசை பிண்டங்கள் மண்டிய நாட்டில் நம்மவர்கள் நைபாண்டி செய்யப்படுவது வியப்பன்று; தொடர்ந்து தென்மொழி' தன் காப்புப் பணியை சிறப்பாகச் செய்தல் வேண்டும். இன்றுள்ள நாளேடுகள் அனைத்தும் ஆரிய அடிமைகளே! தனித்தமிழ் நாளேடு ஒன்று விரைந்து உருவாக வேண்டும். அதுவரை இன்றுள்ள கழிசடை இதழ்களை மானமுள்ளவர்கள் காசு கொடுத்தோ அல்லது இலவயமாகவோ கூட பாரா திருத்தல் வேண்டும்.

இக்காலுள்ள கட்சிக்காரர்களுக்குத் தமிழுணர்வும் நாட்டுணர்வும் முழுமையாய் இல்லை; அதனாற்றான் பிற மொழிகளைக் கற்பிக்க நாளேட்டில் இடங் கொடுப்பதும், உடனிருந்தே கொல்லும் நோய் போல் கலப்புத் தமிழையே எழுதுவதும் இவ்வேதுங்கெட்ட நாட்டில் எங்கும் காணப்படுகிறது. திரைப்படங்களும் தேவையற்ற கிழமை

திங்கள் வெளியீடுகளும் பிஞ்சு மணங்களை அலைகழிக்க வைத்துப் பித்தர்களாக்கிப் பேரழிவுக் குழிகளில் தள்ளுகின்றன; இவற்றை யெல்லாம் கண்டும் காணாதவர்களாய், கேட்டும் கேளாதவர்களாய் இந்நாட்டினர் செல்கின்றனர்.

ஒட்டுமொத்தமாகக் கூறுவோமேயானால் இளைஞர்களின் உழைப்பை இந்நாட்டிற்குப் பயன்படும்படி ஆள வந்தவர்கள் செய்ய வில்லை; மாறாகக் கயமைக்கு உரமிட்டுக் காப்புச் செய்தனர்! செய் கின்றனர்!! இனியும் செய்வர்!!! மேற்கூறிய போக்குகளால் இற்றை இளைஞர்களின் நம்பிக்கையை 'அரசு' இழந்து விட்டது! அதனைப் பெறுதல் இனி அரிதினும் அரிதே! இந்நூற்றாண்டு முடிவதற்குள் கட்சிக் கூண்டில் இருந்து பல்வேறு உள்ளங்கள் 'விடுதலை' பெறு வது உறுதி! உறுதி!! உறுதி!!!

—**சி. நா. செந்தமிழ்ச் செல்வன்**, வேங்கைவாடி, (தெ ஆ.)

*0:775:* அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு, வணக்கம். தென்மொழிக் குடும்பத் திருமணத்தைப் பற்றி எங்களுக்கெல்லாம் ஏன் தெரிவிக்கவில்லை? அப்படியிருப்பினும் இரு மாதங்கள் கடந்தா வது தென்மொழி வாயிலாக அறியும் பேறுபெற்று மகிழ்ந்தோம். மணமக்களைப் படத்தில் கண்டும் உவந்தோம்.

- புலவர். **பொன். முகிலன்**, கூவலூர்.

*0.776:* அன்பரீர் வணக்கம். மன்னார்குடி திரு ச. தமிழ் வேலன் அவர்களின் மடற் கருத்துகளை (*0.764.*) நானும் ஏற் கிறேன். தங்கள்பால் வலியுறுத்துகிறேன். தீமையைத் தகர்க்க வலிமை சேராத போழ்து நன்மையை வளர்க்கவாவது முயலலாமே! இருக்கிற நாம் நான்கு பேரும் நான்கு அணியாக இருந்து கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டிருக்கிறோம்; இந்நிலை மாறி ஒரு பாசறையில் இணைவதற்கு, வளர்வதற்கு வழி வகுப்போம்!

—**பா. இறையரசன்**, க. மு. தஞ்சாவூர்-6,

*0 777:* பேரன்புசான்ற பெருந்தகையீர்! வணக்கம். தங்களின் அரிய சொற்பொழிவினை முதன் முதலாகப் புதுச்சேரித் தனித்தமிழ்க் கழகத்தினர் நடத்திய இரண்டாமாண்டு விழாவில்தான் செவிமடுத் தேன். தமிழ் தூய்மையடைந்தால்தான் இனம். நாடு காக்கப்படு மென்பதனையும், தமிழ்மொழி தூய்மையாகப் பேசப்பட்டாலேயே தமிழர்களுக்குள் இன உணர்வு உண்டாகும் என்பதனையும் தெளி வாக எடுத்துரைத்தீர்கள். தங்களுடைய சீரிய கருத்துகளைக் கேட்க வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் பெருமகிழ்வு கொள்கிறேன். நந்தமிழ், இனம், நாடு காக்க தங்கள் வழி நடக்க நான் அணிய மாயிருக்கிறேன். —**கு. ஏழுமலை,** பொறி. இ. நெய்வேலி-3.

*0:778:* பெருமதிப்பிற்குரிய தனித்தமிழ்க் காவலர், இலக்கியப் பேரறிஞர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம். உலகப் பொதுமறை வான்புகழ் வள்ளுவர் வழியில் தங்களை உரு வாக்கிய தங்களின் அன்புத் தந்தையார் அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து, மனம் கலங்கினேன். அறிவுமிக்க தந்தையாரின் பிரிவால் துயருற்றிருக்கும் தங்கட்கும், தங்கள் குடும்பத்தினர்க்கும் என் ஆழ்ந்த மன வருத்தத்தை தெரிவிக்கின்றேன்.

—**பாவலர் இடிமுரசு**, ஆசிரியர்: 'தமிழ் மலர்' சென்னை-14.

**தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்)**